# மாதிரிப்படிவம்

பொருளடக்கம்

இந்த படிவத்தைப் பற்றி

1. முன்னுரை
2. இலட்சியங்கள்
3. வழி நடத்தும் கொள்கைகள்
4. குறிப்பான செயல்பாட்டு முறைகள்
5. பங்குதாரர்களின் பங்கு
6. செயல்பாட்டுத்திட்டம் / தொடர்ந்த கண்காணிப்பு

**இணைப்பு -** 2006-ம் ஆண்டு ஃபிப்ரவரி மாதம் 23ம் நாள் புது தில்லியில் நடந்த கருத்தரங்கில் உருவாக்கப்பட்ட 'தேசிய கிராமப்புற வீட்டு வசதி மற்றும் உறைவிட கொள்கை'யின் மாதிரிப்படிவம் உருப்பெற உதவியவர்களின் பட்டியல்.

## தேசிய கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிடக்கொள்கை 2006 இந்திய அரசுக்கு ஒரு பரிந்துரை

உதவி

basin

*South Asia*
Regional Knowledge Platform

POOREST AREAS CIVIL SOCIETY (PACS) PROGRAMME - DFID

## **basin**-*South Asia* Members

**The Auroville Earth Institute,** India aims to research, develop, promote and transfer earth-based technologies through training courses, seminars, workshops, publications and consultancy within and outside India.

**Centre for Ecocentric Development and People's Action,** India is a non-profit organization working for People Centered Eco-Centric Development.

**Coastal Area Disaster Mitigation Efforts,** India is a network of twenty voluntary organizations working for the uplift and disaster preparedness of Fishing Communities in India.

**Exnora International,** India aims at developing civic and environmental consciousness through self-help approach, enactment of suitable legislation and environmental protection through local initiative.

**Gram Vikas,** India works with marginalized communities of Orissa for making sustainable improvements in the quality of life of the rural poor through sustainable, socially inclusive and gender equitable processes.

**Grambangla Unnayan Commitee,** Bangladesh is a non-governmental voluntary organization working for people whose lives are dominated by extreme poverty, exclusion, deprivation, illiteracy, disease and handicaps.

**Orissa Development Technocrats' Forum,** India works to facilitate an effective rural housing delivery system through "Promotion of Appropriate Construction Technologies and Sustainable Livelihoods."

**Society of Environmental Journalists,** Nepal is a national level media organization working in the sector of environment. Their mission is to build up public awareness on environmental issues.

**Trust for Village Self Governance,** India focuses on establishing local self governance in villages using *Panchayat* as a tool for creating sustainable employment opportunities in habitat development.

**UNNATI,** India is a not-for-profit, non-governmental organization working over the last 15 years for "civic leadership promotion and strengthening local self governance."

---

**The Aga Khan Planning and Building Services (AKPBS),** Pakistan works to improve living conditions and built environment in rural and urban areas, through the provision of material and technical assistance and construction management services.

**Development Alternatives,** India is a not-for-profit sustainable development enterprise that designs and promotes programmes and products which, through the use of alternative technology, contribute to the enrichment of human life.

**Swiss Agency for Development and Cooperation** (SDC), India is Switzerland's international cooperation agency within the Swiss Foreign Ministry, The Rural Housing Project (RHP) supported by the SDC focuses on providing choices and access to poor rural families for improved housing, especially for affordable, energy and resource-efficient and environment - friendly building material and technologies.

## இந்த படிவத்தைப்பற்றி...

குடிநீர் வசதி, சுகாதாரம், வீட்டு எரிசக்தி, பாதுகாப்பு, தனித்தன்மை மற்றும் சுய மரியாதை... இவையெல்லாம் அமைந்த ஓர் உறைவிடம்... இவையனைத்தும் சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனின் உரிமையாகும்.

கல்வி வசதி, உடல் நல பாதுகாப்பு, குழந்தை நலம் மற்றும் வருமானத்துக்குண்டான வாய்ப்புக்கள் இவையனைத்தும் சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. மேலும் இவைகள் மனித உறைவிடத்தை உருவாக்குகின்றன. அனைத்து குடிமக்களுக்கும் அடிப்படை மனித உரிமைகள், சமத்துவம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவது ஒரு சமுதாயத்தின் கடமையாகும்.

ஒரு நாடு என்ற வகையில் நாமே நமக்கு கொள்கைகளை ஏற்படுத்திக்கொள்கிறோம். இவைகள் மனித உரிமைகள் செயலாக்கம் பெறவும், அனைவருக்கும் சமமான வாய்ப்புக்கள் கிடைக்கவும் வழிசெய்கின்றன. கடந்த சில வருடங்களாக, "அனைவருக்கும் தேவையான உறைவிடம்" என்ற குறிக்கோளை 'தேசிய உறைவிடக்கொள்கை' அடைய முயற்சித்து வருகிறது.

மாறிவரும் சமுதாய, பொருளாதார ரீதியாகவும் வேறுபல தேசிய காரணங்களுக்காகவும் இது பலமுறை மாற்றமும் அடைந்துள்ளது.

கடைசியாக 1998-ல் வகுக்கப்பட்ட 'தேசிய உறைவிடக்கொள்கை, முழுமையானதாக இருந்தாலும் கிராமப்புற வளற்சிக்குப் போதிய அளவு வழிகாட்டாததால் கிராமப்புறத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலவில்லை.

"தேசிய நகர்ப்புற வீட்டு வசதி மற்றும் உறைவிடக்கொள்கை' என்ற புதிய கொள்கை நகர்ப்புற உறைவிடப் பிரச்சினைகளை மட்டுமே அணுகுகிறது. ஆனால் தற்சமயம் நம் நாட்டுக்குத் தேவையானது கிராமப்புற வீட்டு வசதிப் பிரச்சினைகளை பிரத்தியேகமாகவும் முறையாகவும் அணுக அதன் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய 'கிராமப்புற உறைவிடக்கொள்கை'யாகும். இக்கொள்கை கிராமப்புறங்களின் சிறப்புத்தன்மை, முக்கியத்துவம் மற்றும் திறமைகளை அடிபடையாகக்கொண்டிருக்க வேண்டும்.

கிராமப்புற உறைவிட மேம்பாடு என்பது நாட்டின் பொருளாதாரத்துடன் எல்லா விதத்திலும் நெருங்கிய தொடர்புடையது. ஆகையினால் இத்தகைய திட்டங்கள் கிராமப்புற வறுமையை ஒழிக்கும் வகையில் அமைதல் வேண்டும். இந்த வகையில் எடுக்கப்பட்ட முயற்சிதான் "பாரத் நிர்மாண் திட்டம்" (Bharath Nirman Program), மற்றும் "தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உத்தரவாதச் சட்டம்" (NREGA) போன்றவை.

ஆக, கிராமப்புறத்தின் முழுமையான வளர்ச்சிக்கும் மற்றும் நீடிக்கக்கூடிய உறைவிடம் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் அவசியமாகிறது.

மக்களின் முன்னேற்றம் மற்றும் அவர்களின் பொது உரிமைகளைப்பாதுகாக்கும் வகையில் உறைவிடம் மற்றும் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய 'தேசிய கிராமப்புற உறைவிடக்கொள்கை' அமையவேண்டும். சமுதாயத்தின் பல்வேறு வகுப்பைச் சேர்ந்தவர்களின் இத்தகைய அணுகுமுறைகள், ஆலோசனைகள், கருத்துக்கள் மற்றும் செயல்பாட்டு முறைகள் ஆகியவற்றை 'தேசிய கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிடக்கொள்கை' என்ற தலைப்பில் தொகுத்தளிக்கும் முயற்சியில் basin-SA (basin - South Asia Regional Knowledge Platform) என்ற அமைப்பு ஈடுபட்டுள்ளது. இத்தகைய ஆராய்ச்சி மற்றும் தொகுப்பைத் தொடங்கி வைக்க உறுதுணையாயிருந்தது Building and Social Housing Foundation, UK, மற்றும் Swiss Agency for Development and Cooperation ஆகிய அமைப்புக்களாகும்.

நாட்டின் கொள்கைகளை வகுக்கும் மற்றும் அவற்றை நடைமுறையில் பயன்படுத்தும் பல்வேறு வல்லுனர்கள் உதவியுடன் இடைவிடாத ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. கிராமப்புற சூழ்நிலை, தேவைகள், திறன்கள் மற்றும் பெரிய அளவில் நன்மைகள் பயக்கக்கூடிய உறைவிடங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை உருவாக்கத் தேவையான கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன.

இதன் முடிவில் 'இந்திய கிராமப்புற உறைவிடக்கொள்கைக் கட்டமைப்பு' வடிவமைக்கப்பட்டது. இது நாடு தழுவிய அரசின் கவனத்துக்குக் கொண்டுவரும் வகையிலான, 'கிராமப்புற உறைவிடக்கொள்கை'யின் மாதிரிப்படிவத்தை அமைக்க basin-SA-வைத் தூண்டியது.

இதன் முதல் கட்டமாக, பிப்ரவரி 23, 2006 அன்று புது தில்லியில் basin-SA-யின் வழிநடத்துதலுடனும், DFID-யின் Poorest Areas Civil Society Program ஆதரவுடன் ABSSS என்ற நிறுவனம் ஒரு கலந்துரையாடலை நடத்தியது. இதில், அரசுசாரா சேவை நிறுவனங்கள், வங்கித்துறையினர், அரசு அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துப்பரிமாற்றங்களின் அடிப்படையிலான கொள்கைப்படிவத்தின் பரிணாமங்களை வடிவமைத்தனர். (இதில் பங்குபெற்றோர் பட்டியலுக்குப் பார்க்க, Annex 1)

இதுவே உறைவிடக்கொள்கையின் முதல் மாதிரிப்படிவமாகும். இது இன்னும் பெரிய அளவில் பலதரப்பட்ட மக்களிடையே கலந்துரையாடல்கள் நடத்தப்படுவதற்கு தூண்டுகோலாய் அமைகிறது.

இந்தப்படிவம், 'நகர்ப்புற வீட்டு வசதி மற்றும் உறைவிடக்கொள்கை (2005) மாதிரிப்படிவத்தின் பல முக்கிய அம்சங்களைக் கொண்டது. மேலும் இது நகர்ப்புற மற்றும் கிராமப்புறக்கொள்கைகளை இணைக்கும் பாலமாகவும் அமைகிறது.

இத்தகைய கொள்கை வடிவமைப்புப் பணி நாட்டில் எல்லா மாநிலங்களிலும் நடத்தப்படுகிறது. மாநிலங்கள் அளவிலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் இந்த மாதிரிப்படிவத்தில் உரிய முறையில் சேர்த்து முழுமையானதும் முடிவானதுமானதொரு "இந்திய தேசிய கிராமப்புற உறைவிடக்கொள்கையின் மாதிரிப்படிவம்" வடிவமைக்கப்பெற்று இந்திய மக்களால் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும்.

வாசகர்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

உங்கள் கருத்துக்களை basin-SA வுக்கு basin@devalt.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

இவ்வாறு ஒரு, பயனுள்ள 'தேசிய கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிடக்கொள்கை'யை நாம் தயாரிக்க அரசுக்கு ஆதரவளிப்போம்.

# தேசிய கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிடக்கொள்கை 2006

## அரசுக்கு ஒரு பரிந்துரை

## 1. முன்னுரை

1.1. இந்திய கிராமப்புற உறைவிட மேம்பாடு பாரம்பரியமாக மக்களின் நடைமுறையாக இருந்து வந்துள்ளது. உற்பத்திக் கண்ணோட்டத்தில் அல்லாமல் நுகரும் கண்ணோட்டப்படி பெண்களும், ஆண்களும் தங்களின் குடும்பத்தேவைகளுக்கேற்ப தங்களிடம் போதிய அளவு பணசேமிப்பு இருக்கும்போது மட்டும் வீடு கட்டுமானம் மற்றும் மேம்பாட்டுப்பணிகளை மேற்கொண்டனர். கிராமப்புறங்களில் பெரும்பாலான மக்கள் வீட்டை குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளுடன் இணைத்துப்பார்க்காமல் அதைத் தனிமைப்படுத்தியே பார்க்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் அவர்களது பொருளாதார சூழ்நிலையேயாகும். குடிநீர், சுகாதார வசதிகள் தேவை என்பதை மக்கள் உணர்ந்தாலும் வீடு என்பது சமூக அந்தஸ்தின் ஒரு சின்னமாகவே கருதப்படுகிறது. ஆகவே, 'உறைவிட வசதி மற்றும் முன்னேற்றம்' என்பது வீடு என்பது மட்டுமில்லாமல் வசதியான மற்றும் பாதுகாப்பான தங்கும் இடம், குடிநீர், சுகாதாரம், வாழ்வாதார வசதிகள், சமுதாயக் கட்டமைப்பு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது. அத்தகையதொரு உறைவிட மேம்பாட்டில் இந்திய கிராமப்புற மேம்பாட்டு நடைமுறைகள் வேரூன்றி இருக்க வேண்டும்.

1. 2. உறைவிடம் என்பது ஒவ்வொரு மனிதனின் அடிபடை உரிமை. . உணவு, உடை போன்றவைகளுக்கு அடுத்ததாக உள்ள ஒரு தேவை இது. ஒவ்வொரு குடிமகனும் மனித மாண்பு, பாதுகாப்பு, சுகாதாரம் நிறைந்த சூழலில் வாழ, வேலை செய்ய வாய்ப்புக்களை உருவாக்கித்தருவது அரசின் கடமையாகும். கிராமப்புற வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதும், வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதும் இன்றியமையாததாகும்.

2000-ம் ஆண்டிலிருந்து 2005 வரையிலான கிராமப்புற மக்கள் தொகைப்பெருக்கம் 0.82%. இது 2005லிருந்து 2030 வரையிலான காலக்கட்டத்தில் -0.40% ஆக மாறும் என்று ஐக்கிய நாட்டு சபையின் (UN - 1995) ஒரு கணிப்பு கூறுகிறது. கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்வது மிகுந்த அளவில் பெருகிவருகிறது என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. இன்றைக்கு ஏறத்தாழ 80% கிராமப்புற குடும்பங்கள் போதிய அளவு நம்பகமான வாழ்வாதார வசதிகள் இன்றித் தவிக்கின்றார்கள். கிராமங்களில் காணப்படும் மோசமான வேலை வாய்ப்பு வசதிகளே இதற்கு மூலகாரணமாகும். முக்கியமாக, பீஹார், ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், ஒரிசா, மேற்கு வங்காளம் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் கிராமங்களில் வறுமையும், மோசமான உறைவிடங்களின் நிலைமையும் கவனிப்பாரற்ற போக்கும் நிலவுகின்றன. கிராமப்புற மக்களின் பலவீனமான நிலையை இது வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

மேம்படுத்தப்பட்ட கிராமப்புற பொருளாதாரமும் அதன் வழிகாட்டிகளும் நகர்ப்புறத்தின் ஈர்ப்பு சக்தியைக் குறைக்கும் ஒரு எதிர் காந்த சக்தியாக விளங்கும்.

1. 3. மக்களுக்கு உறைவிடம் ஒரு அத்தியாவசியமான தேவை மட்டுமின்றி சமுதாய முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதது. வீடு கட்டும் தொழிலில் முதலீடு மற்ற தொழில் துறைகளைப்போலவே வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் ஆகியவற்றின்மீது பன்மடங்கு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. கட்டுமானத் தொழிலில் அதிகப்படி முதலீடு செய்வதென்பது

வேலை வாய்ப்புப்பெருக்கப் பொருளாதாரத்தில் எட்டு மடங்கு நேரடி வேலை வாய்ப்புக்களுக்குச் சமம் என ஒரு கணிப்பு கூறுகிறது (IIM - Ahmedabad Study 2000). கட்டுமானத் தொழிலால் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் மொத்த தொழிலாளர்களில் 16% (146 லட்சம் - 1997). இது, 7% என்ற அளவில் வளர்ந்தும் வருகிறது. இதில் வீடு கட்டும் பணியாளர்கள் மட்டும் 85.5 லட்சம் பேர். இதில் பெரும்பாலான ஏழை மக்கள் அடங்குவர். வீடு கட்டும் தொழில், வீட்டிலிருந்தே செய்யும் பல தொழில்களை உருவாக்குகிறது. மற்றும் குடியிருப்போரின் ஆரோக்கியத்தையும் இது நிர்ணயிக்கிறது. ஆக, வருமானம், ஆரோக்கியம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டால், வீடு கட்டும் தொழில் வேலை வாய்ப்பைப் பெருக்கி வறுமையை ஒழிக்கும் முக்கிய சாதனமாக இருக்கும்.

1. 4. குடியிருப்புக்களின் தேவை என்பது வளர்ச்சியின் தன்மை குடிபெயர்வோரின் தகுதி மற்றும் குடியிருப்பின் தரம் ஆகியவற்றைப் பொறுத்தது. 2001-ல் எடுக்கப்பட்ட இந்தியக் கணக்கெடுப்பின்படி நாட்டின் 65% வீட்டுப்பற்றாக்குறை கிராமங்களில் மட்டுமே உள்ளது. 71% இந்திய கிராம மக்களில் 41% பேர் மட்டுமே நிரந்தரமான குடியிருப்புகளில் வசிக்கின்றனர். 78% கிராமக்குடியிருப்புக்கள் மட்டுமே ஏதோ ஒரு வகையிலான தண்ணீரைப் பெறுகின்றனர். 23%க்கும் குறைவான மக்கள் மட்டுமே கழிவு மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் தண்ணீர், சுகாதார வசதிகள் போன்ற ஆதாரத்தேவைகள் கொண்ட குடியிருப்புக்களை ஏற்படுத்தவேண்டிய முழுமையான அணுகுமுறையே இன்றையத்தேவை எனத்தெரிகிறது. மற்றும் பண்ணை, பண்ணை சார்ந்த மற்றும் சாராத என்ற இந்த மூன்று தன்மைகளையும் அனுசரித்தே கிராமப்புறங்களில் வீட்டு வசதி செய்துதரப்பட வேண்டும்.

1. 5. கடந்த 15 ஆண்டுகளாக இந்தியாவில் மனித குடியிருப்புக்களின் மேம்பாடு மற்றும் பொதுத்துறையினரின் குறுக்கீட்டின் தொடர்ச்சிதான் இந்த மாதிரி கொள்கைப்படிவமாகும். இதன் தொடக்கமாக 1991-ன் பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கை, 1994-ன் தேசிய வீட்டு வசதிக்கொள்கை, 1998-ன் தேசிய வீட்டு வசதி மற்றும் உறைவிடக்கொள்கை, 1992-ன் 73ஆவது சட்டத்திருத்த மசோதா ஆகியன உள்ளன. இத்தகைய கொள்கையை உருவாக்கும் முயற்சிகள், பொதுத்துறைகளின் வழிநடத்தும் பங்கை முறைப்படுத்துதல், தனியார் துறையின் பங்கை அதிகரித்தல், மையப்படுத்துதலைக் குறைத்தல், ஊக்கத்தொகை மற்றும் வீட்டுக்கடன் வசதியை அதிகரித்தல் மற்றும் சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காத சிக்கனமான ஏழை மக்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய தொழில் நுட்பங்களை ஆதரித்தல் ஆகியவற்றின்மீது கவனம் செலுத்தின.

1. 6. இந்திரா ஆவாஸ் யோஜனா (Indira Awas Yojana), ஸ்வர்ணஜயந்தி கிராமீன் ஸ்வரோஜ்கார் யோஜனா (Swarozgar Yojna (SGSY) போன்ற திட்டங்கள் வீடு கட்டுமானத்துறையிலும் மனித குடியிருப்புக்களிலும் செயல்படுத்தப்பட்டு பலதரப்பட்ட முடிவுகளையே தந்தன. அரசின் கடந்தகால மற்றும் சமீபத்திய முயற்சிகளான PURA (Provision of Urban Amenities in Rural Areas), பாரத் நிர்மாண் செயல்திட்டம் மற்றும் NREGA (Natonal Rural Emplyment Guarantee Act) போன்றவற்றிலிருந்து கற்றுக்கொண்டவைகளை ஆதாரமாகக்கொண்டு இக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

1. 7. இந்த மாதிரிக்கொள்கைப்படிவம், வீடு மற்றும் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில், தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே ஒரு பாலமாக அமையும். மேலும் இது விலை குறைப்பு மற்றும் உள்ளூர் பொருளாதார உயர்வு ஆகியவற்றுக்கு அடிகோலும். இதனைக் கண்காணித்து வழி நடத்த பொதுத்துறைக்கு சில குறிப்பிட்ட முயற்சிகள்

குறித்து ஆலோசனைகள் தரப்படுகின்றன. அதேசமயம் கிராமப்புறங்களில் நீடித்திருக்கும் முன்னேற்றத்தின் பின்னணியாக வீட்டு வசதிகள் மற்றும் கட்டமைப்புக்கள் தொடர்ந்து கிடைக்கவேண்டும். இதற்கு பொருட்களின் (நிதி) ஒருங்கிணைப்பும் சம்பந்தப்பட்டவர்களின் ஈடுபாடும் மிக அவசியம்.

1. 8. இந்த மாதிரிக்கொள்கைப்படிவம், இந்தியாவிலும் மற்ற இடங்களிலும், உறைவிடம் மற்றும் வீட்டு வசதித் துறையில் கையாளப்படும் நூதன தொழில்நுட்பமுறைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அதுமட்டுமின்றி, இப்படிவம் தனது செயல்பாட்டிற்காக லட்சியங்களையும் அவைகளை அடையத்தேவையான மாற்றக்கூடாத கொள்கைகளையும் முன்வைக்கிறது. இந்தப்படிவத்தில், இந்த கொள்கையை நடைமுறைப்படுத்தத் தேவையான அம்சங்களாக, சமுதாயத்தின் பங்கேற்பு, சுய உதவி, உறைவிடம் உருவாக்குதல் மற்றும் வாழ்வாதாரத்தை இணைத்தல், பஞ்சாயத்து ராஜ் என்ற கட்டமைப்பில் வினியோக முறையில் உள்ள மையப்படுத்துதலைக் குறைத்தல், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கக்கூடிய தொழில்நுட்பங்களை உருவாக்குதல், உள்ளூர் உற்பத்தியை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுமானப்பொருட்களையும் அதற்கான தொழில்நுட்பங்களையும் அளித்தல் போன்றவை வலியுறுத்தப்படுகின்றன. மேலும் நிதி உதவி எளிதில் கிடைக்கக்கூடிய வகையில் சிறுசேமிப்பு, ஏழை எளியவர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையிலான பங்கேற்பு, இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் எளியோருக்கு ஆதரவான, சுற்றுச்சூழலுக்கு ஏதுவான, இயற்கைச் சீற்றங்களைத் தாங்கக்கூடிய வகையிலான கட்டுமான முறைகள் போன்ற அம்சங்களையும் இந்தப்படிவம் ஊக்குவிக்கிறது. இப்படிவமானது சம்பந்தப்பட்ட அனைத்து மக்களுக்கும் ஒருமித்த செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த தெளிவான, அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, ஏழை மக்களின் நலனைக் கருத்தில் கொண்ட முயற்சிகளை மேற்கொள்ள ஒரு வழிகாட்டியாக அமையும்.

1. 9. இந்தக்கொள்கைப்படிவம் நிலம், நிதி, சட்டரீதியான மாற்றங்கள், விதிமுறைகள், தொழில்நுட்ப பரிமாற்றம் கட்டமைப்பு, உறைவிட மேம்பாட்டின் நீடித்திருக்கும் தன்மை தொடர்பான கருத்துக்கள், கட்டுமானத்துறையில் வேலை வாய்ப்பு, கொள்கைச் செயல்பாட்டின் கண்காணிப்பு ஆகியவைகளில் சம்பந்தப்பட்ட மக்களின் பங்கு என்ன என்பதை ஆதாரமாகக் கொண்டுள்ளது.

1. 10. இறுதியாக வீட்டு வசதி தொடர்பான கட்டமைப்புக்கள் மற்றும் வாழ்வாதார குறுக்கீடுகள் ஆகியவற்றை இக்கொள்கைப்படிவம் ஒருங்கிணைத்து ஒரு கூட்டு சக்தியை கட்டி எழுப்புகிறது. மேலும், இதன் நோக்கங்களாக, வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்புப் பெருக்கம், எல்லோர்க்கும் உறைவிடம், மனித குடியிருப்புக்களின் நீடித்த மேம்பாடு போன்றவற்றிற்கு இணையாக செயல்படுவதையும் இது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## 2. இலட்சியங்கள்

2010ஆம் ஆண்டுக்குள் தேசிய கிராமப்புற வீட்டு வசதி மற்றும் உறைவிடக்கொள்கை அடையவேண்டிய லட்சியங்கள்:

(i) கிராமப்புறங்களில், அனைத்து மக்களுக்கும் சொந்தமாகவும் மற்றும் வாடகைக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய அளவுக்கு போதுமான வீடுகள் உருவாக்கப்படுதல்.

(ii) பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், உடல் ஊனமுற்றோர், வயதானோர், பெண்களால் நிர்வகிக்கப்படும் குடும்பங்கள் ஆகியோரின் வாழ்க்கைத்தரம் மேம்படும் வகையில்லனவர்கள் அனைவருக்கும் ஆதார வசதிகளுடன் கூடிய நிலம் விரைவில் கிடைக்க ஆவன செய்தல். (iii) அனைத்து உறைவிடங்களும் குடிதண்ணீர், சுகாதார வசதிகள், மின்சாரம் மற்றும் வாழ்வாதார கட்டமைப்புக்கள் போன்ற வசதிகளுடன் இருப்பதை உறுதிப்படுத்துதல், இதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் பண்ணை மற்றும் இதர தொழில்கள் நடைபெற உதவி செய்தல்.

(iv) சுகாதாரமான கழிவு வசதிகள், கடினமான குப்பைகளை சுகாதாரமான முறையில் அப்புறப்படுத்துதல் ஆகிய இதர சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கருத்தில் கொண்டு ஆரோக்கியமான, புதுப்பிக்கப்படக்கூடிய எரிசக்தி உருவாக்கக்கூடிய, மாசு இல்லாத சுற்றுச்சூழல் கொண்ட, வாழ்வாதார வசதிகள் உடைய, வாழ்வதற்கு ஏற்ற கிராமங்களை உருவாக்குதல்.

(v) கிராமப்புற வீட்டு வசதி மற்றும் தேவைகளுக்கேற்ப கட்டமைப்புப்பணிகளை செயல்படுத்த அவசியப்படும் அள்விலான நிதி, முன்னேற்றத்தை முன்னிலையாகக்கொண்ட நிதி உதவி, சிறிய அளவிலான கடன் உதவி, சுய உதவிக்குழுக்கள் (SHG) கிராமப்புற பஞ்சாயத்துக்களுக்கான முன்னேற்ற ஆதார கட்டுமான கடன் உதவி போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

(vi) நாட்டின் குடிமக்களுக்கு குறிப்பாக சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டோர் (SC/ST), ஊனமுற்றோர், கொத்தடிமைத்தொழிலிலிருந்து விடுவிக்கப்பட்டோர், வயதானோர், பெண்கள் மற்றும் இதர எளிய மக்களுக்கு தரமான மற்றும் சகாய விலையிலான வீடுகள் கிடைக்கச் செய்தல்.

(vii) நூதன முறைகளின் உதவியால் (குறிப்பாக PURA) திட்டவட்டமான மற்றும் சமநிலையான வளர்ச்சியை அடைய கிராமப்புற குடியிருப்புக்களுக்கு வழிகாட்டுதல்.

(viii) தொழில்நுணுக்க முறைகளைப் பயன்படுத்தி வீட்டு வசதித் துறையை நவீன மயமாக்கி, அதன் தரத்தை, நீடிப்புத்தன்மையை, உற்பத்தியை, ஆற்றலை அதிகப்படுத்துதல். எளிய மக்களின் வீட்டு வசதித் தேவைகளையும் குறிப்பாக பசுமை வீட்டு வசதிகளின் தேவைகளையும் நிறைவு செய்வதற்கு தொழில் நுட்ப முறை பயன்படுத்தப்படும்.

(ix) குத்தகைக்காலம், நிலம், நிதி மற்றும் தொழில் நுணுக்கமுறை கிடைப்பதில் உள்ள சட்டம், நிதி மற்றும் நிர்வாக சம்பந்தமான தடைகளை நீக்குதல்.

(x) வீடு, அடிப்படை வசதிகள் மற்றும் சமுதாய கட்டமைப்புக்களுக்குத் தேவையான நிலம் மற்றும் நிதியினைப் பெற்றுத்தர மாநில மற்றும் உள்ளூர் நிறுவனங்களை மீண்டும் கட்டியெழுப்பி அவைகளை சக்தி மிக்கவைகளாக மாற்ற வழிகாட்டுதல்.

(xi) கட்டுமானத் தொழில் துறையின் திறமையை அதிகரித்து, கிராமிய உறைவிடங்களின் ஒவ்வொரு நிலையிலும் பங்கேற்க தனியார், பொது மற்றும் கூட்டுறவுத்துறைகளுக்கிடையே உள்ள பங்குதார உறவை பலப்படுத்துதல்.

(xii) வீடு மற்றும் உறைவிட செயல்பாடுகளை திட்டமிட்டு செயல்படுத்துவதில் எல்லா மக்களும், குறிப்பாக பிற்படுத்தப்பட்டோர், ஊனமுற்றோர், பெண்கள், எளியவர்கள் பங்கேற்க உறுதி செய்தல்.

(xiii) சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், மேலும், கலாச்சாரம், கட்டிடக்கலை, பாரம்பரிய அறிவு மற்றும் திறமைகள் போன்றவைகள் உயரச் செய்தல்.

(xiv) கிராமிய வீட்டு வசதி மற்றும் உறைவிடத்துறையில் ஒரு நிர்வாகத் தகவல் முறையை (Management Information System (MIS) ஏற்படுத்துதல்.

(xv) வீடு கட்டுமானத்துறையின் மேம்பாட்டின் மூலம் அதிக வேலைவாய்ப்பை உருவாக்குதல், திறன் மேம்பாட்டை ஏற்படுத்துதல் மற்றும் NREGA -ன் லட்சியங்களுக்கு வழிகாட்டுதல்.

## 3. வழிநடத்தும் கொள்கைகள்

அகராதியின்படி கொள்கை என்பது ஒரு 'அடிப்படை உண்மை' அல்லது செயல் மற்றும் நடைமுறைக்கு வழிகாட்டியாக இருந்து ஒரு கருத்தை உறுதிப்படுத்தும் நியதி ஆகும். உறைவிடமேம்பாட்டைப் பொறுத்தவரை கொள்கைகள் என்பன மனித குடியிருப்புக்களின் சமுதாய, சுற்றுச்சூழல் மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் கோட்பாடுகள் எனக்கொள்லலாம். தேசிய கிராமப்புற வீட்டு வசதி மற்றும் உறைவிடக் கொள்கையை வழி நடத்தும் கொள்கைகளை கீழே பார்க்கலாம்.

### அனைவரையும் உட்படுத்துதல் மற்றும் சாதகமாக இருத்தல்

தரமான மற்றும் நீடித்திருக்கும் உறைவிட முயற்சிகளுக்கும், மேம்பாட்டிற்கும் அதில் சம்பந்தப்பட்ட சமுதாயத்தினரின் குறிப்பாக பெண்களின் பங்கு முக்கியமானது. இந்திய கிராமிய உறைவிட மேம்பாடு என்பது சுய உதவியை அடிப்படையாகக்கொண்ட உறிமையாளரின் நடைமுறையாக இதுவரை இருந்துவந்திருக்கிறது. தற்போது எளிதில் கிடைக்கும் நிதியுதவி மற்றும் தொழில் நுட்பம் காரணமாக மக்கள் முயற்சியின் மூலம் பெறப்படும் நன்மைகள் மற்ற வீட்டு வசதித்திட்டங்களைவிட மேலானவை. ஏழை வகுப்பை கருத்தில் கொண்டு இந்தியாவின் உள்ளூர் நிர்வாகத்தின் அடித்தளமாக விளங்கும் கிராமப்பஞ்சாயத்துக்களை முழுமையாக ஈடுபடுத்துதல் அவசியம். ஏனெனில் இவைகளே உள்ளூர் வளங்களையும், சமூகச் சொத்துக்களையும் மற்றும் நற்பணிகளையும் அடித்தளத்தில் பொறுப்பேற்று நடத்துபவை.

அதேசமயம், தனியார் துறையினை உறைவிட மேம்பாட்டில் ஈடுபடுத்துவது சமநிலையான மற்றும் வர்த்தகரீதியான மேம்பாடு நடைபெறவும் உள்ளூர் சிறுதொழில் உரிமையாளர்கள் முன்னேறவும் ஏதுவாக இருக்கும். திட்டமிடுதல் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்றவற்றில் சாதகமான தன்மை கொள்கை மூலமாக ஊக்குவிக்கப்படவேண்டியதாகிறது. மேலும், ஒவ்வொரு இடத்தின் பிரத்தியேகத்தன்மைக்கும் தேவைகளுக்கும் தகுந்தாற்போல தொழில்நுட்பம், நிதி மற்றும் இதர வளங்களை சமூக அடிப்படை நடைமுறையின் வழியாகத் திட்டமிட்டு செயல்படுத்த ஏதுவாக அமையும். உள்ளூர் மக்கள் உறைவிடக் கொள்கையை தங்கள் சூழ்நிலைக்கேற்ப புரிந்துகொண்டு கீழ்மட்டத்தில் சிறப்பாகப் பயனளிக்க இது உதவியாக இருக்கும்.

### ஒருங்கிணைத்தல்

வீடு, அடிப்படை வசதிகள், சமுதாய கட்டமைப்பு, வாழ்வாதாரம் மற்றும் இயற்கை வளங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் கொள்கை ஊக்குவிக்கப்படுகிறது. இதில் ஒன்று குறைந்தாலும் வாழ்க்கைத்தரம் பயனுள்ளதாக அமையாது. எல்லாம் ஒன்றாக இருக்கும்போது அதன் பயன்கள் சிறப்பாக இருக்கும். கிராமப்புறத்தில் ஒரு நிரந்தரமான கட்டிடம் அல்லது வீடு மக்கள் வேலை செய்து வருமானம் ஈட்ட ஏதுவாயிருக்கிறது. பாதுகாப்பான, சுத்தமான சுற்றுப்புறம் கொண்ட வீட்டில் வசிப்பவர்களுக்கு நல்ல ஆரோக்கியம் மற்றும் கல்வி வசதி கிடைக்கிறது. சமுதாய வாழ்வாதார கட்டமைப்புகளும் வசதிகளும் கிராமிய தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. இதனால் மக்கள் நகர்புறத்திற்கு குடிபெயரும் பழக்கம் குறைகிறது. நகர்ப்புற நிலம், கட்டமைப்புக்கள் மற்றும் அவைகளின் சேவைகளின்மீதுள்ள பளு குறைகிறது. ஆக, பாதுகாப்பான உறைவிடம் மற்றும் தரமான வாழ்வு ஆகிய இரண்டும் தொடர்புடையன. இத்தொடர்பு மக்களின் பலவீனத்தைக் குறைக்கவல்லது.

### எளிதான அணுகுமுறை

உறைவிட அட்டவணை - 1998 (The Habitat Agenda - 1998) கூறுவது: பொருத்தமான உறைவிடம் என்பது தலைக்கு மேல் ஒரு கூரை என்பது மட்டுமில்லை. தேவையான அளவு இடம், நெரிசல் இல்லாமை, பாதுகாப்பு, குத்தகைக்கால பாதுகாப்பு, ஆதாரத்தேவைகள், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள், சுத்தமான சூழல், வேலை செய்யும் இடத்துக்கு எளிதில் சென்றுவர வசதி... இவையனைத்தும் சகாய விலைகளில் என்பதாகும். மனித உரிமைச்சட்டத்தின்படி உணவு, உறைவிடம், வாழ்வாதாரம் போன்றவை மனிதனின் அடிப்படை உரிமைகள். மாறாக அவைகள் அரசு தரும் அன்பளிப்புகள் அல்ல.

உலகின் முக்கியமான மனித உரிமை உடன்படிக்கைகளில் இந்தியா பங்கு வகிக்கிறது. (Universal Declaration of Human Rights, The International Covenant on Civil and Political Rights and the International Covenant on Economics, Social and Cultural Rights). அனைவருக்கும் உறைவிடம் என்பது போன்ற மனித உரிமைகளை இந்தியா ஆதரித்து அவைகளை நடைமுறைப்படுத்துவதிலும் அக்கறை காட்டிவருகிறது. இந்திய தேசிய சட்டத்தின் 21ஆவது ஷரத்து எல்லா குடிமக்களுக்கும்வாழ்வுரிமையை வழங்க உத்திரவாதத்தைத் தருகிறது. இந்திய உச்சநீதிமன்றம் பலமுறை இதனை உறுதி செய்துள்ளது. "வாழ்வுரிமை என்பது உணவு, குடிநீர், நல்ல சூழல், கல்வி, மருத்துவ வசதி மற்றும் உறைவிடம் ஆகிய இவைகளைப் பெறும் உரிமையேயாகும்" என்கிறது. எல்லோரும், குறிப்பாக எளிய மக்கள் உறைவிட உரிமையை அனுபவிக்க வாழ்வாதாரங்கள், நிதி, தொழில் நுட்பம், உறைவிட மேம்பாட்டிற்கான அறிவு, திறமைகள் ஆகியவற்றை அவர்கள் பெற வழி வகுக்கப்பட வேண்டும்.

### பேரழிவுகளிலிருந்து பாதுகாப்பு

நம் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1% (15 லட்சம்) வீடுகள் இயற்கையின் சீற்றத்தால் அழிவைச் சந்திக்கின்றன, இதற்குக் காரணம்? இயற்கையின் தன்மைகளைப் பற்றிய பாரம்பரிய அறிவை நாம் புறக்கணித்ததும், பாதுகாப்பான கட்டுமான முறைகளை உபயோகப்படுத்தாமல் இருப்பதும், அழிவைச் சந்திக்கும் முன்தயாரிப்பு இல்லாதிருப்பதுமே ஆகும். இதனால் பல குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. அதிகம் பாதிப்படைந்துள்ளவர்கள் ஏழை எளிய மக்களே. சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் செயல்பாடுகளும் கிராமப்புற ஏழைகளை அதிகம் பாதிக்கின்றன. சிறிய அளவிலான பாதுகாப்பு முறைகளைக் கையாண்டாலே பேரழிவுகளினால் உயிருக்கும், உடைமைகளுக்கும் உண்டாகும் பாதிப்பை பெருமளவில் தவிர்க்கலாம். இதனால் உறைவிட மேம்பாட்டில் குடும்பங்கள் மற்றும் வீடுகளின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் தருவது மிக அவசியமாகும். பாதுகாப்பான வீடுகள் மற்றும் சமுதாய உறைவிடங்கள் பேரழிவுப் பாதிப்புக்களை பெருமளவில் குறைக்கின்றன.

### வளங்களின் திறம்பாடு மற்றும் நீடித்திருக்கும் தன்மை

வளங்களின் திறம்பாடு மற்றும் நீடித்திருக்கும் தன்மை என்ற கொள்கை நீண்ட மற்றும் குறுகிய கால அடிப்படையில் சமுதாய, பொருளாதார விவகாரங்களையும், சுற்றுச்சூழலை சமநிலைப்படுத்துவதையும் குறிக்கிறது. மேலும் இக்கொள்கையானது உறைவிட மேம்பாட்டில் உபயோகப்படுத்தப்படும் பல்வேறு வளங்கள் (சமூக, இயற்கை, மனித மற்றும் பொருளாதார) மற்றும் அவைகளின் நீடித்த பயனையும் உள்ளடக்கியுள்ளது. பல்வேறு வளங்களின் முதலீட்டால் அதிகபட்சப் பயன்களை நீடித்த முறையில் பெறுவதை இக்கொள்கை அவசியமாக்குகிறது. உறைவிட மேம்பாடு மற்றும் கட்டுமானத்திழில் இயற்கையான சுற்றுச்சூழலின் தரத்தின் மேல் பெரிய அளவு தாக்கத்தை உண்டாக்குகின்றன. நிலம்

மற்றும் இயற்கை வளங்களின் உபயோகம், கழிவுகளை அகற்றுதல் போன்ற விவகாரங்களினால் கட்டுமானத்தொழில் சுற்றுச்சூழலுக்கு ஒரு சவாலான செயல்பாடாக உள்ளது. உறைவிட மேம்பாட்டின் சமுதாய மற்றும் பொருளாதார பயன்களைக் கருத்தில் கொண்டு எதிர்மறையான சுற்றுச்சூழல் தாக்கங்கள் குறைக்கப்பட வேண்டும்.

உள்ளூர் மனித மற்றும் இயற்கை வளங்கள் சிறப்பாக உபயோகப்படுத்தப்படும்போது உள்ளூர் அளவிலான சமுதாய, பொருளாதார மற்றும் மனித மேம்பாடு சிறப்பான முறையில் தொடர்ந்து நிகழும் என்பது நிச்சயம்.

## 4. குறிப்பான செயல்பாட்டு முறைகள்

இக்கொள்கை, கீழ்கண்ட ஒருமித்த செயல்பாட்டு முறைகளைப் பரிந்துரைக்கிறது.

### 4. 1. நிலம் - எளிதில் பெறுதலும் நிர்வகித்தலும்

உறைவிட மேம்பாட்டிற்கு நிலம் ஒரு அத்தியாவசிய தேவை ஆகும். கடந்த காலத்தில் தங்களிடம் நிலம் இல்லாத காரணத்தால் நிறைய குடும்பங்கள் அரசாங்கத்திடமிருந்து உதவி மற்றும் மானியங்களை பெற முடியவில்லை. நிலம் இல்லாதபோது அரசாங்கத்தின் உதவியைப் பெறுவதற்கோ அல்லது வெளியிலிருந்து கிடைக்கும் உதவியைப் பயன்படுத்திக்கொள்ளவோ மக்களுக்குத் தகுதி இல்லை. இக்கொள்கையானது அத்தகைய குடும்பங்கள் தொடர்ந்து விட்டுப்போகாமலிருக்கவும், அவர்களுக்கு நிலம் மற்றும் குத்தகைக்கால வசதிகளும் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும். காட்டுப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர் போன்ற சில குறிப்பிட்ட குழுக்கள் இயற்கையான சுற்றுச்சூழலுக்கு எதிர்மறையாக இருக்கக்கூடும். அத்தகைய ஏழை, எளிய மக்களுக்கு நிலம் கிடைக்கச் செய்யவேண்டியதில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்களுக்கு உள்ள பங்கு தெளிவாக உள்ளது. நிலத்தை எளிதாகப்பெறுவது நீண்டகால பலவீனத்தன்மையையும், வறுமையைக் குறைக்கவும், சொத்துக்களை உருவாக்கவும், சேகரிக்கவும் உதவியாக இருக்கும். உறைவிட மேம்பாட்டிற்காக நிலமில்லாதவர்களுக்கு பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்கள் நிலம் வழங்க வேண்டும். குடியிருப்புக்கள் மட்டத்தில் நில உபயோகம், திட்டமிடுதல் மற்றும் நிர்வகித்தல் போன்றவை கிராமப்புற நிலத்தை வீட்டு வசதிக்காகவும், வேளாண்மை மற்றும் கிராமியத் தொழில்துறை மேம்பாட்டிற்காகவும் சிறப்பான விதத்தில் பயன்படுத்த உதவியாக இருக்கும். முறையான நிலச்சீர்திருத்தத்தின் வாயிலாக கிராமப்புற உறைவிட மேம்பாடு பெருமளவில் உயரும்.

(i) கிராமத்தில் தனியார் உரிமையின் கீழ் உள்ள நிலம், இடங்கள், பொது இடங்கள், பொதுச்சொத்துக்கள், மேய்ச்சல் நிலம் ஆகிய விவரங்களைப் பற்றிய ஒரு நில அட்டவணையை கிராமப்பஞ்சாயத்து தயார் செய்து அதைப் பாதுகாக்கும். நிலம் மற்றும் வீடுகள் இல்லாதவர்களைப்பற்றியும் கிராமப்பஞ்சாயத்து தகவல் சேகரித்து அதைப் பாதுகாக்கும். கிராமம் மற்றும் மாவட்ட அளவில் இந்தத் தகவல்களை பொதுமக்கள் எளிதாக அறிந்துகொள்ள வழி வகை செய்யப்படும். கர்நாடகாவில் செய்யப்படுவது போல தொழில்நுட்பத்தை, குறிப்பாக இன்டர்நெட் அடிப்படையில் நிலங்கள் பற்றிய வரைபடங்கள், உரிமையாளர் பட்டியல் போன்ற தயாரிப்பு முயற்சிகள் வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்படலாம். இந்த முயற்சிகள் தென் இந்தியாவில் முடிவடைந்த பின்னர் இவை வட மாநிலங்களில் முறையாக செயல்படுத்தப்பட ஒரு எடுத்துக்காட்டாக அமையும்.

(ii) உள்ளூர் அளவிலான நில உபயோகம், வீட்டு வசதிக்கான திட்டமிடுதல் மற்றும் நிர்வாகம், சமுதாய வாழிவாதார கட்டமைப்புக்கள், தொழில் துறை மற்றும் னிறுவன உபயோகம் போன்றவைகள் பஞ்சாயத்து அமைப்பின் கடமையாகும். பஞ்சாயத்துக்கள், கிராமசபையின் ஆலோசனையின் பேரில் இவைகளை மாவட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பித்து மாவட்டத் திட்டங்களில் அவைகளை சேர்க்க ஏற்பாடு செய்யும்.

(iii) உள்ளூரில் திட்டங்களில் வீடு கட்ட நிலமில்லாதவர்களுக்கு நிலம் கிடைக்கச் செய்வது அவசியம். இது மொத்த நிலத்தில் 10-25% இருக்கலாம். கிராமப் பஞ்சாயத்துக்கு நிலத்தை நன்கொடையாகத் தருவதினால் வரிச்சலுகைகள் கிடைக்கும்படி ஊக்குவிக்கலாம். மாநில வருவாய்த்துறையினர் ஏழை வகுப்பினரின் நலனுக்காக முறையில்லாத பெயர் பத்திரங்களை முறைப்படுத்தித் தரவேண்டும். இதை அவர்கள் ஒரு பிரச்சாரமாக மேற்கொள்ளவேண்டும்.

(iv) நில ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டை மேற்கொள்ள பஞ்சாயத்துக்கள் ஊக்குவிக்கப்படலாம். பெண்கள் நிர்வகிக்கும் குடும்பங்கள், ஊனமுற்றோர், இயற்கையின் சீற்றத்தால் வீடிழந்தோர் மற்றும் காடிகள் போன்ற இயற்கை வளங்களுக்கு முரண்பாடாக இருக்கக்கூடிய வகையில் தற்போது வீடுகள் வைத்திருப்போர் ஆகியோருக்கு, பஞ்சாயத்து பொதுமக்களின் ஒருங்கிணைந்த கருத்துக்கிணங்கி நிலம் அளிக்க ஏற்பாடு செய்யலாம்.

(v) கிராமப்புற சூழலில் நிலங்கள் வீட்டுரிமை வழங்கப்படுவதன் பொருளாக அமையும். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு (SC/ST) இந்த உறிமையை மாநில அரசுகள் வழங்க வேண்டும்.

(vi) மாநில அரசுகள் பஞ்சாயத்து அமைப்புகளைக் கலந்தாலோசித்து இயற்கைச் சீற்றங்களினால் வீடு மற்றும் நிலமிழந்தோருக்கு மாற்று நிலம் வழங்க தொடர்ந்து ஏற்பாடு செய்யவேண்டும். இத்தகைய நிலங்கள், பாதுகாப்பு, தரம், அளவுமுறை மற்றும் வாழ்வாதாரங்களுக்கு ஏற்ற வகையில் அமைந்திருத்தல் அவசியம். பொது நிறுவனங்கள் வீட்டுவசதிக்காக நிலத்தை கையகப்படுத்துதல் மற்றும் நிலப்பங்கீடு, நிலக்கூட்டுறவு போன்றவைகளை கிராமப்பஞ்சாயத்து மற்றும் கிராம சபை ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் மூலம் நிலம் பெற முயலும் பொது மற்றும் தனியார் முயற்சிகள் சட்டரீதியாகக் கண்காணிக்கப்படும். சட்டம் மீறிய ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு கிராம பஞ்சாயத்து தயாரித்த அட்டவணையின் அடிபடையில் பிற்படுத்தப்பட்டோருக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

### 4.2. நிதியுதவி கிடைக்கப்பெறுதல்

உறைவிட மேம்பாட்டுக்கு நிதியுதவி மிக முக்கியம். சுய உதவிக்குழுக்களின் சிறுநிதி உதவித்திட்டம் சமீப காலங்களில் வெற்றியடைந்திருந்தாலும் ஏழைகளைச் சுரண்டும் சமூக விரோத சக்திகள் இருக்கத்தான் செய்கின்றன. சட்டரீதியான கடன் உதவித்திட்டங்கள் இன்னும் குறைந்த அளவில்தான் உள்ளன. அவைகள் கிராமப்புற ஏழைகளுக்குக் கிடைப்பதில்லை. கிராமப்புறங்களில் நிதி நிறுவனங்கள் கடனுதவி வழங்குவதை உற்சாகப்படுத்தும் வகையிலான ஒரு நல்ல சூழலை உருவாக்கவேண்டும். எளிதில் கிடைக்கும், சலுகைகளுடன் கூடிய நிதி உதவி மிக அவசியம். நிரந்தர வருமானம் இல்லாமை, குறைந்த வருமானம் போன்ற கிராமப்புற மக்களுக்கே உரித்தான நிதி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு நிதியுதவி செய்யும் நிறுவனங்களின் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். சமுதாய அடிப்படையிலான நிதியுதவி தற்போது வெற்றி கண்டுவருகிறது. சமுதாயக்குழுக்கள் தங்களுக்குள்ளாகவே பிரத்தியேக வழிமுறைகளை ஏற்படுத்திக்கொண்டு சேமிப்பு மற்றும் நிதியுதவிகளை நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள இத்தகைய உண்மைச் சூழ்நிலையை அனுசரித்து நிதியுதவி முறைகளில் நூதனமான மாறுதல்களைக் கொண்டுவருவது அவசியம். வெற்றிகரமான கடன் அடைப்பை உறைவிட மேம்பாடு மற்றும் ஏழைகளுக்கான வருமான பெருக்க வாய்ப்புக்களின் வழியாக சிறப்பானதாக மாற்ற முடியும்.

(i) பொதுநில வருமானம், காடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் கட்டமைப்பு பாதுகாப்பு வருமானம் போன்ற நிதியினைத் திரட்டி உறைவிட மேம்பாட்டுக்கு உபயோகிக்க கிராம நிர்வாகத்துக்கு அதிகாரம் அளிக்கப்படும்.

(ii) கிராம நிவாகங்கள் ஏழைமக்களுக்கு வீடு வசதிகளை ஏற்படுத்துவதற்கு நிதி திரட்ட அவைகளுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்படும். மேலும், சகாய விலை நிர்ணயம், எரிசக்தி சேமிப்பு, இயற்கைப் பேரழிவுகளைத் தாங்கும் கட்டுமானங்கள் ஆகியவற்றுக்கும் சலுகைகள் தரப்படும்.

(iii) நிதியுதவி மற்றும் சலுகைகளைப் பொறுத்தமட்டில் வீட்டுவசதி மற்ற கட்டமைப்பகளுக்கு இணையாக கருதப்படும். அப்படிச் செய்வதன் காரணம் இதுறையில் முதலீடு செய்வதை ஊக்குவிப்பதே ஆகும்.

(iv) வங்கிகளும், நிதி நிறுவனங்களும் பொதுமக்களுக்கு உறைவிடமேம்பாடு பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் முதலீடு செய்யும். மேலும், நிதியுதவித் திட்டங்கள் இடைநிறுவனங்களான அரசுசாரா நிறுவனங்களுடன் இணைகப்படும்.

(v) விவசாயத்தின் காலச்சுழற்சி மற்றும் வேலைவாய்ப்பு சுழற்சிகளைக் கருத்தில் கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India - RBI) மற்றும் தேசிய வீட்டுவசதி வங்கி (NHB) ஆகிய அமைப்புக்கள் வருமானம் பெருக்காத சொத்துக் கொள்கைகளை (Non-performing Assets) தனிப்பட்ட முறையில் அமைத்து செயல்படுத்தும். நிதியுதவி நிறுவனங்களும், மக்களின் வருமானம், கடன் திருப்பித்தரும் திறன் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு கடனைத்திரும்பப்பெறும் சட்டங்களில் மாறுதல்களைக் கொண்டுவரவேண்டும்.

(vi) NABARD அமைப்பின்கீழ் மத்திய அரசிடமிருந்து பெறப்படும் சுமார் 500 கோடி ரூபாய் நிதியினை முதலீடாக வைத்து தேசிய கிராமப்புற உறைவிடமேம்பாட்டு நிதி (National Rural Shelter Fund) என்ற அமைப்பு தொடங்கப்படவேண்டும். இது கிராமப்புற ஏழை மக்களின் உறைவிட, வீட்டு வசதி மேம்பாட்டுக்கு உதவும் வகையில் வங்கிகளுக்கு மறுநிதியுதவி செய்யும். வட்டிவிகிதமும் பெருமளவு குறைக்கப்படும். வட்டி விகிதம் குறிப்பட்ட நிர்ணயமாக இல்லாமல், நாபார்ட் (NABARD) விகிதத்தைவிட குறிப்பிட்ட அதிகப்புள்ளிகள் என்ற வகையில் நிர்ணயிக்கப்படும். இது நாபார்ட் விகிதத்தைவிட சுமார் 500 ஆதாரப்புள்ளிகள் வரை அதிகமாக இருக்கலாம். சில வங்கிகள் வேறுசில இடைப்பட்ட அமைப்புக்களை கிராமப்புற நிதியுதவிக்குப் பயன்படுத்துகின்றன. அதுசமயம், அதிகபட்ச நிர்வாக செலவுகளையும் கணக்கில் கொள்ளவேண்டும். கட்டுமானப் பொருட்கள் தயாரிக்கும் தனியார் துறையும் நிதி சேர்ப்புக்கு உதவலாம். கிராமப்புற ஏழை மக்களுக்கு வழங்கப்படும் கடனுதவியின் மேம்பாட்டு செலவிற்கு இந்த நிதி பயன்படும். இவ்வாறாக கிராமப்புற வீட்டு வசதி கடனுதவியின் வட்டி விகிதம் நகர்ப்புற வட்டிவிகிதத்தைவிட குறைவாக இருக்கும்.

(vii) முறையற்ற, நிச்சயமில்லாத வருமானத்தின் காரணமாக கிராமப்புற வீட்டு வசதி ம்ற்றும் உறைவிட மேம்பாட்டிற்கு கடனுதவி வழங்குவதில் உள்ள அபாயத்தை அகற்ற மத்திய அரசிடமிருந்து சுமார் 500 கோடி ரூபாய் நிதி உதவியுடன் நாபார்ட் அமைப்பினுள் ஒரு 'மீட்பு நிதி' அமைக்கப்படும். இந்த நிதியைப் பெருக்கவும் தங்கள் கடனுதவிக் குறிக்கோளை அடையவும் வணிக வங்கிகள் நிதி வழங்கும்.

(viii) வங்கிகள் வீட்டுவசதி மற்றும் உறைவிட மேம்பாட்டுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யும். மற்றும் எளியோருக்கு நிதியுதவி கொடுப்பதில் இலக்குகளை நிர்ணயித்து அதை பொதுவாக அறிவிக்கும். தற்சமயம் வங்கிகள் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளுக்கு அளிக்கும் கடன் உதவி (முக்கியமாக, வீட்டு வசதித்துறைக்கு) சுமார் 15 லட்சம் ரூபாயைத் தாண்டுகிறது. ஆக இதனால் பயனடையும் மக்கள் நகரங்களிலும் பெரிய ஊர்களிலும் வசிக்கும் நடுத்தரவர்கத்தினராக இருக்கிறார்கள். வீட்டைப் புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்த்தல் போன்றவைகளுக்கு நகரமாயிருப்பின் அதிகபட்சம் 2 லட்சம் ரூபாயும், கிராமமாயிருப்பின் 1 லட்சமும் தரப்படுகிறது. கிராமத்தில் வாழும் எளிய மக்களுக்கு உதவும் வகையில் குறைந்தபட்சமாக 2 லட்சம் ரூபாயும் புதுப்பிக்கும் பணிகளுக்கு 50,000 ரூபாயும் பரிந்துரைக்கப்படும்.

(ix). வங்கிகளும், நிதி நிறுவனங்களும், நிலப்பட்டாவின்மீது கிராம நிர்வாகம் தரும் சான்றிதழ்களையே போதுமானதாகக் கருதி நிதியுதவி வழங்கும். அப்போதுதான் கிராமத்தில் உள்ள அனத்துதரப்பினரும் வீட்டு வசதி கடனுதவி முறையினால் பயனடைவர்.

(x). உறைவிட மேம்பாட்டு நிதியுதவி காப்பீடு (Insurance) செய்யப்படும். இதற்குத்தேவையான சந்தாத்தொகையை வங்கியே வழங்கும். அல்லது அரசும், நிதி நிறுவனங்களும் பகிர்ந்து ஏற்றுக்கொள்ளும்.

(xi). கிராமப்புறங்களில் கடனுதவி செய்வது செலவு கூடுதலான மற்றும் பாதுகாப்பு குறைவான ஒன்றாகும். இதையும் மீறி நிதி நிறுவனங்கள் கிராமப்புற மக்களுக்கும், பலவீனமான வகுப்பினருக்கும் கடனுதவியை அதிகரிக்க வங்கிகளுக்கும் இதர பொது நிதி நிறுவனங்களும் Section 36 (1) (viia) of IT Act -ன்படி அளிக்கப்படும்

ஆதாயங்களை வீட்டு வசதி நிதி நிறுவனங்களுக்கும் (Housing Finance Companies - HFC) நீட்டிக்கப்படும்.

(xii). மேலும் கடனுதவி வழங்கும் நிதிநிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள சுய உதவிக்குழுக்கள் (SHGs), அரசுசாரா சேவை நிறுவனங்கள் (NGOs) மற்றும் சிறுநிதி நிறுவனங்கள் ஆகியவற்றையும் உட்ப்படுத்தி வீட்டு வசதி கடனுதவி ஏழைகளுக்கும் கிடைக்கச்செய்தல்.

(xiii). கிராமப்புற ஏழை மக்களுக்கு சிறுநிதி உதவி அதிகம் ஊக்குவிக்கப்படும். சில காரணங்களால் ஒரு குடும்பம் முறையான கடனுதவி பெற முடியாமற்போனால் சிறுநிதி உதவித்திட்டம் மூலம் அதை சரிகட்ட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், இத்தகைய ஏழைக் குடும்பங்களை சுயஉதவிக்குழுக்களக சேர்த்து அதன் அடிப்படையில் கடனுதவி வழங்கப்படுவது ஊக்குவிக்கப்படும்.

(xiv). வாழ்வாதாரம் மற்றும் வருவாய் பெருக்கத்திட்டங்கள் உறைவிடம் மட்டும் வீட்டு வசதி மேம்பாட்டுக்கான சேமிப்புடன் தொடர்புபடுத்தப்படும். சுய உதவிக் குழுக்களின் சேமிப்புத்தொகை வாழ்வாதாரங்களை உருவாக்கவும், வங்கிகளுடன் தொடர்புடைய உறுப்பினர்கள் தனிநபர் கடனைத் திருப்பித்தர உபயோகப்படுத்தப்படும். (ஆயினும், கடன் திருப்பித்தரும் பொறுப்பு தனிநபரையே சாரும்).

(xv). குறைந்த விலையில் மற்றும் எரிசக்தித் திறன் படைத்த கட்டுமானப்பொருட்களைத் தயாரித்தளிக்கும் நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகள் அளிக்கப்படும்.

(xvi). வாழ்வாதாரம் மற்றும் சமுதாயக் கட்டமைப்பு நிதியானது ஏழை எளியவர்களின் வீட்டு வசதி மேம்பாட்டு கடனுதவுவி மற்றும் நிதியுடன் இணைக்கப்படும்.

### 4. 3. சட்டரீதியான சீரமைப்பு

உறைவிட மேம்பாடு விரைவாக செயல்பட உறைவிட நடைமுறைக்கு முதுகெலும்பாக விளங்கக்கூடிய அடிபடைசட்டம் மற்றும் முறையான சீரமைப்பு கூஷருக்க வேண்டியது அவசியம். அரசாங்கம், தனியார் மற்றும் இதர சம்பந்தப்பட்ட மக்களுக்கு சாதகமானதொரு சூழ்நிலையை ஏற்படுத்தி அவர்கள் அனைவரையும் உறைவிட மேம்பாட்டு செயல்முறையில் பங்கேற்கச் செய்யவேண்டும். போதிய அளவு விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடு கூஷருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். சிறப்பான, வெளிப்படையான கண்காணிப்பு முறைகள் கூஷதற்கு ஆதாரமாக இருக்க வேண்டும்.

உறைவிடத் துறை சம்பந்தப்பட்ட நில உரிமைகள், நில உபயோகம், கட்டிடத்துறை கோட்பாடுகள், விலை நிர்ணயம் போன்றவை நன்கு ஆராயப்பட்டு சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். முழுமையான செயல்பாட்டிற்காக இதில் சம்பந்தப்பட்ட பல்வேறு அரசுத்துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுதல் அவசியம். இத்தகைய சட்ட சீர்திருத்தங்கள் கிராமங்களில் உறைவிட மேம்பாட்டிற்கு மிகுந்த பயனளிக்கும்.

(i) கிராமப்புற உறைவிட மேம்பாட்டுத் திட்டங்களுக்கும், அவற்றுக்குத் தேவையான அனுமதிகளுக்கும் மற்றும் கடைபிடிக்கவேண்டிய விதிமுறைகளுக்கும் கிராமபஞ்சாயத்து அமைப்புக்களே பொறுப்பு வகிக்கும்.

கட்டிடத்திட்ட அனுமதி வழங்கும் முறை அனைவரும் பயன்படுத்தக்கூடிய எளிய முறையாக இருக்கும். இதனால் அவசியமற்ற கால தாமதம் தவிர்க்கப்படும்.

(ii) மாவட்ட அளவிலான திட்டங்கள் ஜில்லா பஞ்சாயத்துக்களின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட திட்ட மேலாளர்களின் உதவியால் மேற்கொள்ளப்படும்.

(iii). 73ஆவது சட்டத்திருத்த மசோதாவின் இக்ஷந்திய தேசிய சட்டம் 243 ZD & ZE -ன்படி மத்திய, மாநில நிதித்துறைகள், உள்ளூர் நிதி நிலைமை மற்றும் இதர வளங்களைக் கருத்தில் கொண்டு, பஞ்சாயத்து அமைப்புக்கள் உள்ளூர் திட்டங்களைத் தயாரிக்கும். இவை மாவட்ட திட்டக் குழுக்களின் மூலம் மாவட்ட அளவிலான திட்டங்களில் சேர்க்கப்பட்டு செயல்படுத்தப்படும். மேலும் இவை மாநில, தேசிய திட்டக்குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இம்முறையில், இயற்கை வளங்கள், நிலம், நீர் வளங்கள் மற்றும் காட்டு வளங்கள், இவைகளைச் சார்ந்த பல்வேறு திட்டங்கள், நிர்வாகம் இவையனைத்தும் உள்ளூர் நிர்வாகத்திடமே இருக்கும். இவ்வாறு எல்லா செயல்பாடுகளும் வெளிப்படையாகவும் நீடித்தமுறையிலும் பயன்படுத்தப்படும்.

(iv) மாவட்ட அளவில் தயாரிக்கப்படும் வீட்டு வசதித் திட்டம், காலவரைக்கு உட்படுத்தப்பட்டு, நடப்பு ஐந்தாண்டு திட்டத்தின் முடிவு காலத்திற்குள் அமல்படுத்தப்படும். புதிய பெருந்திட்டம் (Master Plan) சம்பந்தப்பட்ட சட்டங்களும், முறைகளும் எளிதாக்கப்படும்.

(v) மத்திய அரசால் தயாரிக்கப்பட்ட உறைவிட மேம்பாடு பற்றிய "மாதிரிப் பஞ்சாயத்துச் சட்டத்தை" கடைபிடிக்குமாறு எல்லா மாநிலங்களுக்கும் வலியுறுத்தப்படும். வீட்டு வசதி சம்பந்தப்பட்ட குறைந்தபட்ச தரம் மற்றும் அளவு நிர்ணயம் ஆகியவை மேற்கண்ட மாதிரிச் சட்டத்தின் மூலம் பரிசீலிக்கப்பட்டு மாவட்ட, மாநில அளவிலான பரிந்துரைகள் செய்யப்படும். வீட்டிலேயே செய்யக்கூடிய வாழ்வாதார செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு, குறைந்தபட்ச பண்ணை நில அளவு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இதேபோல, கிராமிய ஆதார சேவைகளுக்கும் குறைந்தபட்ச தர நிர்ணயம் செய்யப்படும்.

(vi) மாநிலத்தின் வாடகைக்கட்டுப்பாட்டுச் சட்டங்கள் திருத்தப்பட்டு புறநகர்ப் பகுதிகளிலும் மற்றும் நகரமயமாகிக்கொண்டிருக்கும் ஊர்களிலும் வாடகை வீட்டு வசதிகளில் முதலீடு செய்யப்படுவது ஊக்குவிக்கப்படும்.

(vii). பஞ்சாயத்து அமைப்புக்களின் தலைமையில் நில சம்பந்தமான கொள்கைகள் மற்றும் சட்டங்கள், நிலம் கையகப்படுத்துதல், நில கூட்டுறவு மற்றும் நிலப்பகிர்வு தொடர்பான விவகாரங்களில் சட்டரீதியான உதவிகளைச் செய்யும். (viii). அரசுசாரா சேவை அமைப்புகள் (NGOs) மற்றும் சமுதாய அமைப்புகள் (Community Based Organisations - CBOs) ஆகியவை, பொது-தனியார்-கூட்டுறவு (Public-Private-Partnership -- PPP) திட்டம் மூலம் வீட்டு வசதித் திட்டங்களில் ஊக்குவிக்கப்படும். கிராமத்தில் பணிபுரியும் அனைத்து அரசுசாரா சேவை நிறுவனங்களுக்கும் கிராம சபையின் பொறுப்பில் இருக்கும்.

(ix). காப்பீட்டுச் சட்டங்கள் கிராமத்து வீடுகளையும் காப்பீடு செய்யக்கூடியவகையில் திருத்தப்படும். ஏமாற்று முறைகளைத் தவிர்க்க வீட்டுப்பெயர்ப்பத்திரக் காப்பீடு ஊக்குவிக்கப்படும்.

(x). கிராமப்புற ஏழை குடும்பங்களுக்கு பத்திரப்பதிவு கட்டணம் குறைக்கப்படும் அல்லது முற்றிலும் நீக்கப்படும்.

(xi). நவீன தொழில்நுட்பங்களை உபயோகித்து, மாநிலங்கள் தங்கள் அசையாச்சொத்து பத்திரப்பதிவுச் செயல்பாடுகளை எளிதாக்க வலியுறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரைக்குள் அந்தந்த மாநில அரசு வெளியிடும் இந்தியப் பதிவுச் சட்டம், அதன் பிரிவுகள், அறிவிப்புகள், வழிமுறைகள் மற்றும் அரசு ஆணைகள் அனைத்தும் திருத்தியமைக்கப்படும். நிலத்தை வாங்கும்போதும், விற்கும்போதும் பத்திரப்பதிவுச் செயல்பாடுகள் எளிதாக்கப்பட்டு, வில்லங்கப்பத்திரம் மற்றும் இதர தகவல்கள் எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

(xii). மாநில மற்றும் இதர நிர்வாகங்களின் நில வருமான பத்திரங்கள் கணினிமயமாக்கப்பட்டு (Computerized) குறிப்பட்ட காலவறைக்குள் ஜி. ஐ. எஸ். முறையில் (G.I.S. Mode) செயல்படும்.

(xiii) சில பகுதிகளில் ஒரே எல்லைகளைக் கொண்ட பலவகை சட்டங்கள் அமலிலிருக்கும். அப்போது சிறுநகரம் மற்றும் தேசிய திட்ட சட்டம் (Town & Country Planning Act) மற்றும் மேம்பாட்டுச்சட்டம் (Development Act) போன்ற சட்டங்களே அமல்படுத்தப்படும். அந்தந்த மாநில அரசு இத்தகைய சட்டத்திருத்தங்களை மேற்கொள்ளும். சிறு நகரத்திட்டம் மற்றும் மேம்பாடு சட்டங்கள் அமலிலிருக்கும் மேம்பாட்டுப் பகுதிகளில் விவசாய நிலக்கட்டுப்பாடு அமலிலிருக்காது.

(xiv). நீடித்த தன்மை உடைய கட்டுமான முறைகளை ஏற்று செயல்படுத்த சட்டங்களையும், கோட்பாடுகளையும் மாநில அரசுகளே தயாரிக்கும்.

(xv). உறைவிடங்களில், தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் மேம்பட்ட வாழ்க்கைத்தரம் ஆகியவை, பல்வேறு சட்டதிட்டங்கள் மற்றும் பலதரப்பட்ட நிர்வாக அமைப்புக்கள் ஆகியவைகளின் ஒருங்கிணைப்பைப் பொறுத்தே அமையும். ஆக, இயற்கைவள நிர்வாகம், திட கழிவுப்பொருட்களை அகற்றுதல், சூரிய ஒளிச்சக்தி உபயோகம், மழைநீர் சேகரிப்பு, குப்பையிலிருந்து எரிசக்தி தயாரித்தல், திட்ட நடைமுறையில் மின் விநியோகம் ஆகியவற்றைக் கண்காணிக்கும் சட்டதிட்டங்களை ஒருங்கிணைத்து திட்டமிடுவது அவசியமாகும். மற்றும் மின்விநியோக அமைப்புகளை மாசுபடாமல் பராமரிப்பதும் உள்ளூர் நிர்வாகத்தின் பொறுப்பாக அமையும்.

(xvi). நிலம், நீர், காடுகள், எரிசக்தி போன்ற இயற்கை வளங்களைக் கட்டுப்பாடற்ற முறையில் நுகர்வதை மனித குடியிருப்புகளும் ஆதரிக்கக்கூடாது. ஆக, இது குறித்த சட்டங்கள் மற்றும் இயற்கை வள பாதுகாப்பு வழிமுறைகள் கண்காணிக்கப்பட்டு செயல்முறைப்படுத்தப்படும்.

(xvii) எரிசக்தி உபயோகம் மற்றும் மாசுபடுதல் ஆகியவற்றை குறைக்க எரி சக்தி குறைவாகப் பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்களும் தொழில் நுட்பங்களும் உபயோகப்படுத்தப்படும். புதுப்பிக்கக்கூடிய சக்தி சம்பந்தமான சட்டதிட்டங்களும் வழிமுறைகளும் வரையறுக்கப்படும். (முக்கியமாக, சூரிய ஒளிச்சக்தியினால் வீட்டுக்கட்டிடங்களில் இயங்கும் இயந்திரங்கள், சமையல் கருவிகள், மற்றும் சூரிய மின்விளக்குகள்). கட்டுமானத்தில் உபயோகிக்கப்படும் இரண்டாந்தர மரங்களை பயிர் செய்யவது ஊக்குவிக்கப்படும்.

(xviii)விவசாய மற்றும் தொழிற்சாலைக் கழிவு மற்றும் வீண் பொருட்களை உபயோகித்து கட்டுமானப் பொருட்களைத் தயாரிக்கும் பணிகளை ஊக்குவிப்பதில் அரசு பெரும்பங்கு வகிக்கும். அனைத்து அரசாங்க வீட்டு வசதி மற்றும் கட்டுமானப்பணிகளுக்கும் இத்தகைய பொருட்கள் மிகுந்த அளவு உபயோகிக்கப்பட வேண்டும். அரசு இத்தகைய சுற்றுச்சூழலுக்கு ஏற்ற, நூதனமான பொருட்களுக்கு வரிச்சலுகைகள் அளித்து அதிக எரிசக்தியினை பயன்படுத்தும் பொருட்களுக்கு அதிக வரியும் விதிக்கும். (xix) நிலநடுக்கம், வெள்ளம், புயல் போன்ற அழிவுகளுக்கு க்ஷலக்காக இருக்கும் க்ஷடங்கள் தேசிய பலவீனப்பகுதிகளின் வரைபடத்தில் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, எல்லா மாநில / யூனியன் டெரிடரி அரசுகளும் பேரழிவைத்தாங்கும் கட்டுமானங்கள் மற்றும் நில உபயோகத் திட்டம் ஆகியவை தொடர்பான விதிமுறைகளை தவறாமல் கடைபிடிக்கும்.

(xx) ஏழை எளியவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மற்றும் புறக்கணிக்கப்பட்ட ஆண், பெண் இருபாலர்களுக்கும் அளிக்கப்படும் நிலமோ, வீடோ திரும்ப விற்கப்படுவது, குறிப்பிட்ட காலக்கட்டம் வரை தடைசெய்யப்படும்.

## 4. 4 ஆதாரக்கட்டமைப்பு: வீட்டுவசதி என்பதோடல்லாமல் முழுமையான உறைவிடம் என்ற கொள்கையை வலியுறுத்துதல்

முழுமையான குடியிருப்புக்கள் என்பது, நிரந்தர வீடுகள், பள்ளிகள், சுகாதார மையங்கள், வாழ்வாதார கட்டமைப்பு, இயற்கை வளங்கள், போக்குவரத்து வசதி, தொலைபேசி வசதி ஆகிய ஆதார வசதிகள் கொண்டதொரு அமைப்பாகும். இவையே ஒரு சமுதாயத்தின் மேம்பாடு மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றை வரையறுக்கும். கிராமப்புறங்களுக்கு, முக்கியமாக வட இந்திய மாநிலங்களில் தேவைப்படும் மேம்பாட்டுத்திட்டங்கள் குறித்து பல்வேறு அமைப்புகள் கவனம் செலுத்தவேண்டியது மிக அவசியமாக உள்ளது.

தனிக்குடும்ப அளவிலும் மற்றும் ஒட்டுமொத்த கிராம அளவிலும் தலையீடு தேவைப்படுகிறது. கிராம மட்டத்தில் கடனுதவியைவிட பள்ளிகள், வாழ்வாதார மையங்கள், தொழிற்கூடங்கள், சாலைகள் மற்றும் மின்வசதி போன்ற கட்டமைப்புக்களின் மேம்பாட்டிற்காக பொது முதலீடு செய்வதாகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. ஆதாரக்கட்டுமான மேம்பாடு முதலீட்டை ஈர்க்கும். உள்ளூர் திறமைகளை வளர்க்கும். கிராமப்புறங்களின் வர்த்தக மற்றும் பொருளாதார மதிப்பை உயர்த்தும். கடனுதவியை நடைமுறையில் பயனுள்ளதாகச் செய்யும்.

(i) இந்திய கிராமப்புறங்களில் அவசியமான ஆதாரக் கட்டமைப்புப்பணிகளை ஏற்படுத்தும் மற்றும் மேம்படுத்தும் முறைகளைக் கண்டறிவது மிகவும் அவசியமானதொன்றாக இருக்கிறது. இதில், தற்போதுள்ள ஆண் பெண் பாகுபாட்டு நிலைமைகளைக் கருத்தில் கொள்வது முக்கியம்.

(ii). மனித குடியிருப்புகள் சார்ந்த கட்டமைப்புக்களுக்குள் பாதுகாப்பான குடிநீர் விநியோகம், குளியல் மற்றும் கழிப்பிட வசதி, கழிவுப்பொருட்களை முறையாக சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல், போக்குவரத்து வசதி, மின்வசதி, எரிசக்தி வசதி மற்றும் சுத்தமான, சுகாதாரமான சுற்றுச்சூழல் ஆகிய இவையெல்லாம் அடங்கியுள்ளன. மேலும், அதாரக்கட்டமைப்பின் இதர அங்கங்களாக கல்வி வசதிகள் (பள்ளிகள்,

கல்லூரிகள், கிராமப்புற ஆராய்ச்சி நிறுவனங்கள்), பொழுதுபோக்கு வசதிகள் (பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், இதர பொழுதுபோக்கு மையங்கள்), விளையாட்டுத் தலங்கள், மருத்துவ வசதி (மருத்துவ மனைகள் மற்றும் சுகாதார மையங்கள்), சாலை வழி, இருப்புப்பாதை வழி, நீர் வழி மற்றும் கணிணித்தொடர்பு வசதிகள் ஆகியவை உள்ளன. வாழ்வாதாரம் சம்பந்தப்பட்ட ஆதாரக்கட்டமைப்பு என்பது சகாய விலையிலான தொடர்ச்சியான மின் விநியோகம், பண்ணை சாராத தொழில்களுக்கான தொழிற்கூடங்கள், கால்நடைகளைப் பராமரிக்கும் இடங்கள், நீர் விநியோகம் மற்றும் கழிவு அகற்றுதல் ஆகியவை நீடித்திருக்கக்கூடிய உறைவிடங்களின் அங்கங்களாகும்.

(iii). நீடித்திருக்கக்கூடிய வாழ்வாதாரங்களைக் கருத்தில் கொண்டு, உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஆதாரக் கட்டமைப்புப் பணிகளைத் திட்டமிட்டு செயல்படுத்துவது பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் பொறுப்பாகும்.

(iv). ஆதாரக்கட்டமைப்புப் பணிகளைப் பொறுத்தவரை, 'தனியார்-பொது- கூட்டுறவு' (Public-Private-Partnership) முறை செயல்படும். இது இரண்டாம் குறிப்பீட்டில் கூறப்பட்ட அனைத்துத் துறைகளிலும் இருக்கும். ஆதாரக்கட்டமைப்புக்கு உதவும் வகையில் தனியார் முதலீட்டை ஈர்க்க, பெரிய அளவிலான பொருளாதாரத்திட்டங்கள் வகுக்கப்படும். மத்திய அதிகாரம் இல்லாத எரிசக்தி உருவாக்கம், நீரை சுத்தப்படுத்துதல், கழிவுகளை சுத்திகரித்தல் போன்ற பணிகளுக்கு சிறு தொழில் உரிமையாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

(v). சில மாநிலங்களில் செயல்படுத்தப்படும் மாதிரித்திட்டங்களிலிருந்து பெற்ற தகவல்களைக்கொண்டு பல்வேறு பங்குதாரர்களின் உதவியுடன் பல இடங்களில் பங்கேற்பு முறையில் PURA செயல்படுத்தப்படும்.

(vi) இரண்டாம் குறிப்பீட்டில் கூறப்பட்டுள்ள அனைத்துத்துறைகளிலும் மேம்பாட்டை ஏற்படுத்தச் செயல்படும் தனியார் துறை மற்றும் உள்ளூர் அதிகாரிகளின் முயற்சிகளை மத்திய, மாநில அரசுகள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஊக்குவித்து ஆதரவளிக்கும்.

(vii) தேசிய அளவில் உருவாக்கப்படும் ஆதாரக்கட்டமைப்புத் திட்டங்களினால் (உதாரணமாக, மின்சக்தி உற்பத்தி, சுரங்கத்தொழில், ரயில்வே, விமான நிலையம் போன்றவை), கிராமப்புற மக்களை இடமாற்றம் செய்ய நேரிடுமாயின், அவர்கள் இழந்த அதே அளவு நிலம் மற்றும் வீடுகள் போன்றவை ஈடாகத் தரப்படும். இழப்பிற்கு ஈடாக பணம் கொடுத்தல் தவிர்க்கப்படும்.

## 4. 5 விநியோக முறைகளின் மறுசீரமைப்பு

சுயமாய் நீடித்திருக்கும் விநியோக முறையை உருவாக்குவது, கிராமப்புற வீட்டுவசதித்துறை சவாலின் ஒரு முக்கிய அம்சமாகும். கிராமப்புற சூழ்நிலையில் பலதரப்பட்ட சாதகமான செயல்பாடுகளின் அடிபடையில் மட்டுமே உறைவிட விநியோக முறையானது சுயமாய் நீடித்திருக்க முடியும். நிரந்தர வருமானம், சேமிப்பு ஆகியவற்றை உருவாக்கத் தேவையான தொழில் வாய்ப்புக்கள் இல்லாமை, நீடித்திருக்கக்கூடிய கடன் வசதி இல்லாமை

போன்றவை இதன் மேம்பாட்டில் உள்ள முக்கிய தடைகளாகும். ஆக, அரசுமற்றுமின்றி பலதரப்பட்ட பங்குதாரர்களின் பங்கேற்பில் ஒரு பயனுள்ள விநியோக முறையை முடிந்த அளவு சீர்திருத்தி அமைத்தல் மிக அவசியம். சமீப கால நடைமுறையின்படி சரியான கட்டுமானப் பொருட்கள் மற்றும் உழைப்பு ஆகியவற்றின் லாபகரமான உள்ளூர் விநியோகத்தை சிறப்பான முயற்சிகளின் வழியாக செயல்படுத்துவதால் கிராமப்புற ஏழைகளுக்கு நல்ல உறைவிடம் கிடைக்கும். அத்துடன் உள்ளூர் பொருளாதார முனேற்றத்திற்கும் இது உதவும்.

அடிபடைப் பொருட்களான வீடுகள், எரிசக்தி, சுத்தமான நீர் போன்றவைகளை சந்தை உருவாக்கம் மற்றும் மேம்பாட்டு நடைமுறையால் தேவைகளாக மாற்ற முடியும். கிராம மக்களின் வருமானத்தை கணிசமாக உயர்த்த, கிராமம் சார்ந்த உற்பத்தி மையங்களை உருவாக்கி, அவற்றை சுய உதவிக்குழுக்கள் மற்றும் தூய்மையான தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் தனியார் சிறு தொழில் முயற்சிகள் மூலமாக செயல்படுத்தலாம். இத்தகைய வர்த்தகச்சந்தை மேம்பாட்டு முறையில் பயிற்சியளித்தல், தேவையான தொழில்நுட்பங்களைப் பெற வழிவகை செய்தல், தகவல் பரிமாற்றம் மற்றும் சந்தை பற்றின அறிவு ஆகியன அடங்கியுள்ளன. மேலும், இந்தச் சந்தை அணுகுமுறை, ஏழை எளியோரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்களின் உற்பத்தியை வலியுறுத்துகிறது. இதன் வழியாக பிற்படுத்தப்பட்ட இடங்களில் உள்ளூர்ச்சந்தைகளின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியை ஆதரிக்கிறது.

(i) கிராம அளவிலான உறைவிட மேம்பாட்டுத் திட்டங்களைப் பற்றி கிராம சபைகள் முடிவெடுத்தபிறகு அவைகளை கிராமப் பஞ்சாயத்துக்கள் செயல்படுத்தும்.

(ii) பொது அமைப்புக்கள் மற்றும் கிராமப்புற வீட்டுவசதித்திட்டங்கள் தொழில்நுட்பரீதியான ஒப்புதல் வழங்க உதவி செய்யும். மக்களை மையப்படுத்திய வீட்டு வசதிகளை மேம்படுத்த இவைகள் வேறு திட்டங்களிலிருந்து வேறுபட்டதாக அமையும்.

(iii) கிராமப்பஞ்சாயத்தின் தலைமையில், நிதி நிறுவனங்களின் உதவியுடன் சுய உதவிக்குழுக்களின் அடிப்படையிலான வீட்டு வசதித்திட்டங்கள் ஊக்குவிக்கப்படும்.

(iv) கிராமம் மற்றும் மாவட்ட அளவிலான நிறுவனங்களின் ஒருங்கிணைப்பின் வழியாக "ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து நடைமுறை இடத்திற்கு (Lab to Land) என்ற முறையில் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட சகாய விலையிலான கட்டுமானப் பொருட்களும் தொழில்நுட்பங்களும் இடமாற்றம் செய்வது தீவிரப்படுத்தப்படும்.

(v) கிராமப்புறங்களில், வரிச்சலுகைகள் மற்றும் திறன் மேம்பாடு மூலமாக நீடித்திருக்கக்கூடிய, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்பங்களை விநியோகிக்க முன்வரும் சிறு தொழில் நிறுவனர்கள் ஊக்குவிக்கப்படுவர். உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இத்தகைய கட்டுமானப் பொருட்கள் தரக்கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படும்.

(vi) மாவட்ட, கிராம பஞ்சாயத்து அளவில் நீடித்திருக்கக்கூடிய கட்டுமானப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் மக்களுக்கு எளிதாகக் கிடைக்கக்கூடிய விதத்தில் கிராமீயக் கட்டுமானத் தொழில் மையங்கள் அமைக்கப்படவேண்டும். இவை, சிறுதொழில் நிர்வாக முறையில்லமைகப்படும். மேலும் இவை மத்திய அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாகவும், உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைக்கொண்டு கட்டுமானப்பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களாகவும்,

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பயிற்சியளிக்கும் மையங்களாகவும் செயல்படும்.

(vii) மாவட்ட அளவிலான கட்டுமானப்பொருள் வங்கிகள் நிறுவப்படும். கிராமப்பஞ்சாயத்து தலைமையில் கிராமங்களிலும் இத்தகைய வங்கிகள் (Gram Kosh) பல்வேறு நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றதாக இருக்கும்.

(viii) மக்கள் பயன்படுத்தும் கட்டுமானப்பொருட்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை உள்ளூர் தேவைகள் கலாச்சாரம் மற்றும் இயற்கை வளங்கள் அடங்கிய உள்ளூர் நடைமுறையின் வெளிப்பாடாக இருக்கவேண்டும்.

(ix) கட்டுமானத்திட்டங்களில் கட்டுமான விதிமுறைகள் மற்றும் பாதுகாப்பு விதிகளின் கடைப்பிடிப்பு கிராமப்பஞ்சாயத்தால் செயல்படுத்தப்படும்.

(x) மாநில அரசுகள், புதிய கட்டுமானப்பொருட்களை விலை நிர்ணய விதிமுறைகளுக்கு உட்படுத்தி தீவிரமாக ஊக்குவிக்கும். ஆய்வின் விளைவுகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்திட்ட அட்டவணையில் சேர்க்கப்படும். ஜில்லா மற்றும் கிராமப்பஞ்சாயத்து இத்தகைய விலை நிர்ணய அட்டவணையை உள்ளூர் நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல மாற்றியமைக்கும்.

(xi) பல்வேறு கட்டுமானப் பொருட்களின் தரக்கட்டுப்பாடு ஒழுங்குமுறை, உள்ளூர் சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு அமைக்கப்பட வலியுறுத்தப்படும். இதனால் உயர்ந்த தரம், சரியான விலை ஆகியவை மையப்படுத்தப்படாத உற்பத்தியின் வழியாக கிடைக்கும்.

### 4 .6 திறன் மேம்பாடு

இக்கொள்கையை சிறப்பாக செயல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் திறன் மேம்பாடு அவசியமாகும். இதே வகையில், பாதுகாப்பான உறைவிடங்கள் அமைத்தல், சமுதாய அடிப்படையில் திட்டமிடுதல், ஆகியவற்றில், அரசு அதிகாரிகளின் திறன்களையும் மேம்படுத்துவது மிக முக்கியமாகிறது. உள்ளூர் சமுதாயங்களின் அளவில் பாதுகாப்பான கட்டுமானத்தின் மதிப்பீடு பற்றிய பொதுவான விழிப்புணர்வோடு உறைவிட அடிப்படையிலான வாழ்வாதாரம் பற்றிய கல்வியானது ஒரு நல்ல, பாதுகாபான கிராமப்புறத்தை கட்டியெழுப்புவதில் நீண்ட கால பயனளிக்கும். சந்தை மேம்பாடிற்காக கைவினையாளர்கள் மற்றும் சிறு தொழில் நிறுவனர்களின் தொழில்நுட்பம் மற்றும் நிவாகத் திறனை மேம்படுத்துவது மிக முக்கியம்.

(i) சுற்றுச்சூழலுக்கு ஏற்ற, பாதுகாப்பான உறைவிடம் ஒவ்வொருவரின் உரிமை என்ற விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் வகையில் கிராமப்புற உறைவிட பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படும்.

(ii) திறன் மேம்பாடு என்பது எல்லா வீட்டு வசதித்திட்டங்களின் முக்கிய அம்சமாக இருக்கும். முக்கியமாக இயற்கைக்கு ஏற்ற கட்டுமானப்பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் கிராமப்பஞ்சாயத்துகள் மூலம் மக்கள் கட்டும்மனங்களைப் பங்கேற்பு முறையில் திட்டமிடுதல், கண்காணித்தல் போன்ற செயல்பாடுகளின் திறன் மேம்பாட்டை அடையவும் ஊக்குவிக்கப்படுவார்கள்.

(iii) 'திறமையில்லாத' தொழிலாளர்களின் திறமைகளை வளர்க்கவும், அவர்களுக்கு பயிற்சியளிக்கவும் NREGA சட்டம் பயன்படுத்தப்படும்.

(iv) 20 சதுர மீட்டர்களுக்கு மேல் அளவு கொண்ட வீடுகள் மீது கிராமப் பஞ்சாயத்து 'பயிற்சி வரி' விதிக்கும். இதன் மூலம் பெறப்படும் நிதி கட்டிடத்தொழிலாளர்களின் திறனை மேம்படுத்தும், புதுத்திறமைகளை வளர்த்துக்கொள்ளும் பயிற்சிகள் அளிக்க பயன்படுத்தப்படும். சகாய விலையில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் கட்டிடங்களுக்கும், சுய உதவி முறையில் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கும் பயிற்சி வரி விலக்கு அளிக்கப்படும்.

(v) கிராமங்களில் சிறப்பான உறைவிட வினியோகத்திற்காக மாநில அரசு மற்றும் கிராமப்பஞ்சாயத்து நிர்வாகிகளின் திறன் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

(vi) கட்டிட மேஸ்திரிகள் (Mason), தச்சர்கள் (Carpenter), குழாய்வேலை செய்பவர்கள் (Plumber), மற்றும் இதர தொழிலாளர்கள் கிராமிய சிறு தொழில் செய்பவர்களுக்கு நிகராகக் கருதப்படுவர். மாநில அரசு ஆதரவு தரும் திட்டங்களில் இவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கப்படுவார்கள். .

(vii) கட்டுமானத்தொழிலே பெண் தொழிலாளர்களை அதிக அளவு நியமிக்கிறது. மேலும் இத்தொழிலில் இவர்களுக்கு கூலி விகிதம் குறைக்கப்பட்டு அதிக அளவில் சுரண்டப்படுகின்றனர். இந்த நிலை மாறவேண்டுமானால் பெண் தொழிலாளர்கள், மேற்பார்வையிடுபவராகவும் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகவும் ஆக அவர்களின் திறமை மேம்படுத்தப்பட வேண்டும். பொது நிறுவனங்கள் இவைகளைச்செயல்படுத்த முன்வரலாம். எல்லா பயிற்சிமையங்களும் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சேர்த்துக்கொள்ள வேண்டும்.

(viii) சில அபாயகரமான கட்டுமானத்தொழில்களில் ஈடுபடும் பெண்தொழிலாளர்களின் பாதுகாப்பையும், ஆரோக்கியத்தையும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் கண்காணிக்கலாம். மேலும் அந்த நிர்வாகிகள் குழந்தைப்பாதுகாப்பு மையங்கள், தற்காலிக தங்கும் இடங்கள் போன்ற வசதிகளையும் கட்டிடப்பணி நடக்கும் இடங்களில் செய்து தரலாம்.

(ix) ஆண்களுக்கும், பெண்களுக்கும் மையப்படுத்தாத பயிற்சிகளை அளிக்க சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கு பரிந்துரை செய்யப்படும். பயிற்சியளித்தல் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான அரசின் பல்வேறு திட்டங்கள் இந்தத் திசையில் ஒருங்கிணைக்கப்படும்.

(x) கட்டுமான மையங்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மையப்படுத்தப்படாத பயிற்சிகளை அளிக்கும். பயிற்சியளித்தல் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான அரசின் திட்டங்கள் இத்திசையில் செய்யப்படும் முயர்சிகளோடு ஒருங்கிணைக்கப்படும். மாநில அரசுகள் தொழில்நுட்ப நிருவனங்களின் வழியாக கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்வோருக்கோ அல்லது தனியார் தொழில் நிறுவனர்களுக்கோ திறன் மேம்பாடுப் பயிற்சிகளை கட்டுமான மையங்களில் அளிக்கும்.

(xi) தொழில்நுட்ப உபயோகம், குறிப்பிட்ட திறமைகள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளின் பலன் ஆகியவைகளில், அங்கீகாரம் பெற்ற அமைப்புக்களை உட்படுத்தி மாவட்ட மற்றும் பஞ்சாயத்து அளவில்,

'திறன் மதிப்பீட்டு' முறை அமல்படுத்தப்படும். முறையான தொழில்நுட்ப உபயோகத்தின் மூலம் உள்ளூர் கட்டுமானப்பொருட்களின் தரம் மேம்படுத்தப்படும்.

கட்டிடக்கலை மற்றும் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் மற்றும் இதர பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் நூதன கட்டுமானப் பொருட்கள், கட்டுமான உத்திகள், எரிசக்தி விரயமில்லாத அம்சங்கள் ஆகியவை பாடத்திட்டத்தின் முக்கிய பாகங்களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் இதனால் அவைகளின் பயன்பாடு முறைப்படுத்தப்படும்.

## 4. 7. வீட்டுவசதித்துறையில் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்துறைக்கும் உறைவிட மேம்பாட்டுத் தொழில்நுட்பத்திற்கும் உள்ள தொடர்பு

முறையான அல்லது மற்ற சேமிப்புத்திட்டங்களில் பங்கேற்கும் கிராமப்புற ஆண்களும், பெண்களும் தங்களது சொந்த சேமிப்பு அல்லது கடனுதவி வழியாக உறைவிட மேம்பாட்டிற்காக பொருளாதார வளங்களை அணுக முடியும். சமுதாய, பொருளாதார சூழ்நிலை சாதகமாக இருக்கும்போது கிராமப்புற வாடிக்கையாளர்கள் தங்கள் முக்கியமானதாகக் கருதும் கடனுதவி சேவைகளுக்கு அதிக வட்டி கட்டுகிறார்கள். கடனை திருப்பிக் கட்டுவதில் அவர்களுக்கு எந்த சிக்கலும் இருப்பதில்லை. கிராமங்களில் உள்ள உறைவிடத் திட்டங்கள் வாழ்வாதாரக் கட்டமைப்புக்களை உருவாக்குதல், முதலீடு மற்றும் சந்தைத் தொடர்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும். கட்டுமானப் பொருட்களின் உற்பத்தி மற்றும் கட்டுமானத் திறமைகள் ஆகியவை வாழ்வாதார வாய்ப்புக்களாகும். சுற்றுச்சூழல் சுகாதாரத்தை அதிகரிக்கும் கழிப்பிடப் பொருட்களின் வியாபாரம் ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும். இத்தகைய வாய்ப்பையும் மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(i) ஆரோக்கியமான உறைவிட மேம்பாட்டு வளர்ச்சிக்கு வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் தடைகளாகும். மாநில மற்றும் உள்ளூர் அதிகாரிகள் 'தேசிய வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம்' போன்ற திட்டங்களின் மூலம் வறுமை ஒழிப்பு மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றைத் தீவிரமாக செயல்படுத்தவேண்டும். வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் செயல்பாடுகள், சேவைத்துறை விரிவாக்கம், பயிற்சி அளித்தல் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவை அமல்படுத்தப்படும்.

(ii) உள்ளூர் வேலை வாய்ப்புப் திட்டங்கள் மற்றும் அதாரக் கட்டமைப்புக்களின் உருவாக்கம் ஆகியவற்றை செயல்படுத்த சிறப்பான கருவியாக இருப்பது பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களாகும்.

(iii) மாநியநிதி, கிராம சபைக்களுக்கு அளிக்கப்படும். இதில் 30% நிதி உறைவிடக் கட்டமைப்புகளுக்கு செலவிடப்படும். குறைந்தபட்சம் 10% நிதி உள்ளூர் மக்களுக்கு தொழிற்பயிற்சி, வீட்டுவசதி மற்றும் சமுதாய வசதிகளுக்காக செலவிடப்படும்.

(iv) உள்ளூர் விவசாயம், தொழிற்சாலைக்கழிவுகளான கற்தூள், சாம்பல், செம்மண் ஆகியவைகளை பயன்படுத்தித் தயாரித்த கட்டுமானப் பொருட்களை உபயோகப்படுத்துவதில் அரசு முன்னிலை வகிக்கும். இத்தகைய

பொருட்கள் மத்திய அதிகாரமற்ற சிறுதொழில் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும்.

(v) உறைவிட மேம்பாட்டுத்திட்டங்களில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களில் குறைந்தபட்சம் 50% தொழிலாளர்கள் ஒரே கிராம சபையைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

(vi) ஐந்தாம் குறிப்பீட்டில் கூறப்பட்டுள்ள தொழிலாளர்களில் குறைந்தபட்சம் 50% பெண்களாக இருப்பார்கள். அவர்கள் திறமை தேவைப்படும் மற்றும் ஓரளவே திறமை தேவைப்படும் வேலைகளில் அமர்த்தப்பட்டு ஆண் தொழிலாளர்களுக்கு இணையாக கூலி பெறுவார்கள்.

(vii) பேரழிவுகளுக்குப்பின் மேற்கொள்ளப்படும் கட்டுமானப்பணிகளுக்கும் மேற்கூறிய விதிகள் (v) & (vi) செல்லுபடியாகும்

## 4. 8. திறம்பட்ட கண்காணிப்பும் எளிதான தகவல் பரிமாற்றமும்

சிறப்பான உறைவிட மேம்பாடு சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் திறமையான, தொடர்ச்சியான கண்காணிப்பாலும் வெளிப்படையான தகவல் பரிமாற்றத்தாலும் தீர்க்கப்படலாம். அத்துடன் நிலம், விலை நிர்ணயம், உள்ளூர் வளங்கள், திட்டம் ஆகியவற்றைச் சார்ந்த தகவல் அமைப்பு ஆகியவை மிக அவசியம். இண்டர்நெட் நிர்வாக முயற்சிகள் செய்து காட்டியபடி தகவல் பறிமாற்றத்தை வழிநடத்தக்கூடிய மிகப் பெறிய ஆற்றல் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு முறைகளில் உள்ளது.

(i) உள்ளூர் அளவிலான நீடித்திருக்கும் மற்றும் பாதுகாப்பான கட்டுமானங்கள், கட்டிடங்கள், அவற்றுக்குண்டான விதிமுறைகள், கோட்பாடுகள் ஆகியவை உள்ளூர் மொழியில், அந்தந்த கிராமப்பஞ்சாயத்திடம் கிடைக்கும்படி செய்யப்படும்.

(ii) மாநில அளவிலான கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிடக்கொள்கை, மற்றும் பிரத்தியேகமான மாவட்ட செயல்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றைத் தயாரிக்க மத்திய அரசு மாநில அரசுக்களுக்கு உதவும். மாதிரிக் கோட்பாடுகளைத் தயாரித்தல், சட்டரீதியான சீர்திருத்தங்கள், வரிச்சலுகைகள், பொருளாதாரத்துறை சீர்திருத்தங்கள், வளங்களை திரட்டுவதில் நூதன செயல்முறைகள் ஆகியவை இதில் அடங்கும்.

(iii) மாவட்ட வீட்டுவசதி மற்றும் உறைவிடக் கொள்கைகளின் செயல்திட்டங்களை அடிபடையாகக் (District Housing and Habitat Action Plan) கொண்டு, மாநில அரசுகள், "மாநில அளவிலான வீட்டுவசதி மற்றும் உறைவிடக்கொள்கைகள்" மற்றும் "மாநில, கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிட மேம்பாடு செயல்திட்டம் (State Housing and Habitat Policies and State Rural Housing and Habitat Action Plans - SRHAP) ஆகியவற்றைத் தயாரிக்கும். இவை, (a) நிறுவன, சட்டரீதியான, விதிமுறை மற்றும் நிதிசேர்ப்பு முயற்சிகள் சார்ந்தவையாக இருக்கும். மேலும் இது, (i) நில விநியோகம் (ii) விதிகள்/உபவிதிகளின் திருத்தம் (iii) தொழில்நுட்ப மேம்பாடு (iv) ஆதார கட்டமைப்பு அளித்தல் ஆகியவைகளுக்கு வழிகாட்டியாக அமையும்.

(iv) கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிடக் கட்டமைப்புத்திட்டங்கள் கிராமப்பஞ்சாயத்து மூலம் செயல் படுத்தப்படும். இதற்கு மாவட்ட கிராம மேம்பாட்டு நிறுவனங்கள் துணை புரியும். திட்டத்தகவல்கள் தகவலரியும் உரிமைச்சட்டத்தின் (Rights to Information Act) கீழ் பொதுமக்களின் பரிசீலனைக்குத் தரப்படும்.

(v) செயல்பாட்டுத் திட்டத்தகவல்கள் மாவட்ட கிராம மேம்பாட்டு நிறுவனங்களிடம் இருக்கும். பொதுமக்களுக்கு அந்தத் தகவல்கள் எளிதாக கிடைக்கப்பெறும். ஒரு "நிர்வாகத் தகவல் அமைப்பு", மாநில அளவிலான மாவட்டச் செயல்திட்டங்கள் செயல்படுவதைக் கண்காணிக்கும்.

(vi) SRHAP செயல்பாட்டைக் கண்காணிக்க, மாநில அளவிலான, ஒரு அமைப்பு உருவாக்கப்படலாம். இது வீட்டு வசதி மற்றும் உறைவிட செயல்பாடுகளால் நேரடியாகப் பயனடையும் மக்களுடன் தொடர்பு கொண்டிருக்கும்.

(vii) மத்திய அரசு அளவிலான உயர்மட்டக் கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, "தேசிய வீட்டு வசதி மற்றும் உறைவிட மேம்பாட்டுக் கொள்கை"யின் செயல்பாடுகள் குறிப்பிட்ட காலத்தில் மதிப்பீடு செய்யப்படும்.

(viii) அரசு வளங்களை இதர வளங்களுடன் ஒருங்கிணைக்க ஷிஸிபிகிறி அமைபானது தனியார் துறை, அரசுசாரா சேவை நிறுவனங்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புக்கள், பஞ்சாயத்து நிறுவனங்கள் மற்றும் குறு மாநில அமைப்புக்கள் ஆகியவற்றை பங்கேற்பு முறையில் தூண்டி, ஊக்குவித்து வழிநடத்தும்.

(ix) மனித குடியிருப்புகளுக்கான தேசிய ஆணையம் ஒன்று (National Commission on Human Settlement - NCHS) இந்திய அரசால் அமைக்கப்படும். இது,

(a) நீடித்திருக்கும் தன்மை, சமநிலையான பிரதேச வளர்ச்சி, உறைவிட நிலைமை, ஆதார சேவைகளின் எளிதாகக் கிடைக்கும் தன்மை, வறுமையின் நிலைமைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 'இந்தியாவில் மனித குடியிருப்புக்கள்' என்பதை மதிப்பீடு செய்யும்.

(b) 73ஆவது சட்டத்திருத்த மசோதவின்படி மத்திய அதிகாரம் குறைக்கப்படும் நடைமுறையை பரிசீலனை செய்யும்.

(c) வீட்டுவசதி மற்றும் உறைவிடக் கொள்கைகளின் லட்சியங்களை அடைய பல்வேறு துறைகளின் "உள்-துறை செயல்திட்டத்தை" பரிந்துரைக்கும்.

(d) ஆராய்ச்சி, இடங்களை சந்தித்தல், கூட்டங்கள் ஆகியவை மூலம் (a), (b) & (c) யின் தகவல்களை சேகரிக்கும்.

## 5. பங்குதாரர்களின் பங்கு

**5.1 இகொள்கையில் சம்பந்தப்பட்ட பல்வேறு பங்குதாரர்களின் செயல்பாடுகள் மூலமாக அடையப்போகும் லட்சியங்கள் பின்வருமாறு:**

**5.1.1 கிராம நிர்வாகம் அல்லது பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் மற்றும் கிராம சபைகள் கீழ்கண்ட பணிகளைச் செய்யும்.**

- உறைவிட மேம்பாட்டில் சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட பின்விளைவுகள், உறைவிடங்களின் தரம் மற்றும் அவைகளின் சுகாதார சம்பந்தப்பட்ட விஷயங்கள், கட்டுமானங்களில் பாதுகாப்பு, ஆகியவைகளைக் கவனத்தில் கொண்டு ஒர் நீண்டகால உறைவிட தொலைநோக்கை உருவாக்குதல்.
- வீட்டுவசதி, ஆதாரக்கட்டமைப்பு மற்றும் இதர தொழில்கூடங்கள், எரிசக்தி போன்ற வாழ்வாதாரத் தேவைகளை கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட வீட்டுவசதி பற்றாக்குறைகளைக் கணித்து, கிராமப்புற உறைவிட செயல்பாட்டுத்திட்டங்களைத் தயாரித்தல்.
- கிராம சபைகளின் அனுமதியுடன் அரசு மானியம் பெறும் நபர்களின் பட்டியலைத் தயாரித்தல்.
- உறைவிட மேம்பாட்டுத் திட்டங்களில், நூதன முறைகளை உள்ளூர் பங்குதாரர்களின் ஆற்றல் அடிப்படையாகக்கொண்டு பங்கேற்புமுறையில் திட்டமிடுதல் மற்றும் நிதி அமைப்பு போன்றவைகளை ஊக்குவித்தல்.
- பழங்குடியினர் போன்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுவசதிக்கான நிலம் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்தல்.
- அரசாங்கத்தின் திட்ட செயல்பாடுகளில், உள்ளூர் மட்டத்தில் பங்கெடுத்து அவைகளின் தரத்தை கண்காணித்தல்.

**5.1.2 மாவட்ட நிர்வாகம் மற்றும் அதன் கிளைகள், கீழ்கண்ட பணிகளைச் செய்யும்:**

- மாவட்ட அளவிலான உறைவிட செயல்பாட்டுத் திட்டங்களை தொகுத்தல்.
- சாலைகள், பாதுகாப்பான குடிநீர் விநியோகம், கழிவுகளைச் சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல், எரிசக்தித் தீர்வுகள், பொது போக்குவரத்து, மின்விநியோகம், ஆரோக்கியம், கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்ற ஆதாரக் கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய வீட்டுவசதித் திட்டம் உருவாக்கப்படுதலை ஊக்குவித்தல்.
- வீட்டுப்பற்றாக்குறையைப் போக்கத் திட்டமிடுதல் மற்றும் வீட்டுவசதிக்காக நிலம் கிடைக்கச்செய்தல் (குறிப்பாக பலவீனமான குழுக்களுக்கு).
- இந்திய தேசிய சட்டத்தின் 11ஆவது ஷரத்தில் கூறப்பட்டுள்ள 29 குறிப்புக்களை கருத்தில் கொண்டு, கிராம மற்றும் மாவட்ட நிர்வாகிகளுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உள்ளூர் அளவில் அமைத்தல்.

- வீட்டு வசதி மற்றும் ஆதாரக் கட்டமைப்புத் துறைக்கான மத்திய மாநில அரசுகள் ஆதரவளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- திட்டமிட்ட மேம்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் விதிமுறைகளை சிறப்பான முறையில் அமல்படுத்துதல்.
- நிலப்பற்றாக்குறையால் அவதிப்படும் மற்றும் அதிக நிலங்களைக் கொண்டிருக்கும் பஞ்சாயத்துக்களிடையே கூட்டுமுயற்சியை ஏற்படுத்தி, நிலங்களைப் சமமாகப் பங்கிட்டுக்கொடுத்தலை மாவட்ட அதிகாரிகள் மேற்கொண்டு நில பற்றாக்குறையை சரி செய்தல்.
- மாவட்ட அளவிலான வளங்களைச் சமனிலைப்படுத்திப் பங்கிட்டுக்கொடுத்தலை மாவட்ட நிர்வாகமும், அதிகாரிகளும் செயல்படுத்தி, சமுதாயம் மேம்பாடு அடைய முனைய வேண்டும். உதாரணமாக, கூட்டுறவுப் பொருளாதார முறையில் செயல்படக்கூடிய பல கிராமங்களின் கட்டமைப்பை ஏற்படுத்தி, உற்பத்திப்பொருட்களை, சுழற்சி மற்றும் கொடுத்துவாங்கும் முறைகளைக் கையாண்டு, உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படையச் செய்தல்.

### 5.1.3 மாநில அரசு மற்றும் அதன் அங்கங்கள் கீழ்கண்ட செயல்பாடுகளை மேற்கொள்ளும்.

- மாநில கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிடக் கொள்கை (State Rural Housing & Habitat Policy - SRHHP), மற்றும், மாநில கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிட மேம்பாட்டு செயல்திட்டங்கள் (State Rural Housing & Habitat action Plans - SRHAP) ஆகியவற்றைத் தயாரித்தல்.
- வீட்டுவசதி மற்றும் ஆதார சேவைகளில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்க்க நீண்ட காலத் திட்டங்கள் மற்றும் குறுகிய காலத் திட்டங்கள் ஆகியவைகளைத் தயாரித்தல். நீர் வளம், தொடர்பு, கழிவுநீர் அகற்றம், சுகாதாரம், திடக் கழிவுப்பொருட்களின் நிவாகம், மின்விநியோகம் மற்றும் வாழ்வாதார மேம்பாடு ஆகிய ஆதாரக் கட்டமைப்புச் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- வீட்டுவசதி மற்றும் அவற்றுக்குத் துணையான ஆதாரக் கட்டமைப்புப் பணிகளை ஊக்குவிக்கத் தேவையான சட்டரீதியான அம்சங்களை மதிப்பீடு செய்தல்.
- குடிநீர் வசதி, சுகாதாரம் எரிசக்தி மற்றும் போக்குவரத்து ஆகிய சமுதாயக் கட்டமைப்புக்களை வடிவமைக்க உதவுதல்.
- மேம்படுத்தும் மற்றும் முறையான பணிகளில் கிராம நிறுவனங்களை அதிகாரம் உள்ளதாக மாற்றுதல் மற்றும் அவைகளை மீண்டும் கட்டியெழுப்பி உதவுதல்..
- மாநில மற்றும் தனியார் துறைகளின் உறைவிடம் மற்றும் வாழ்வாதார செயல்பாடுகளை திட்டமிடவும் கண்காணிக்கவும் பஞ்சாயத்து அமைப்புக்களுக்குப் பயிற்சியளித்தல்.
- SRHHP -ன் செயல்பாட்டை எளிதாக்கும் வகையில் தற்போதுள்ள சட்டங்களை சீர்திருத்தம் செய்தல், புதுச்சட்டங்கள் இயற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்ளுதல். குறிப்பாக பஞ்சாயத்துக்கள் எளிதாக நிலம் பெற வகை செய்தல்.
- எல்லாத் தரப்பினருக்கும் வீட்டுவசதி மற்றும் ஆதாரக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணிகளில்

தனியார் துறையினர் ஊக்குவிக்கப்படுதல்.

- வீட்டுவசதி, சிறு நிதியுதவி மற்றும் ஆதார கட்டமைப்புப்பணிகளில், அரசுசாரா சேவை நிறுவனங்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள், தனியார் துறை, பஞ்சாயத்து அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகியவைகளுக்கிடையே பங்குதார உறவை ஊக்குவித்தல்.
- மத்திய அதிகாரத்தைச்சாராத முறையில் கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்து அவைகள் எல்லொர்க்கும் கிடைக்கச் செய்தல்.
- அரசு மேற்கொள்ளும் ஆதாரக் கட்டமைப்புப் பணிகளுக்காக கட்டுமானத் தொழிலாளர்கள் பயிற்சி பெற உதவுதல்.
- மாநில மற்றும் உள்ளூர் அளவில் நிர்வாகத் தகவல் அமைப்பை (Management Information System) ஏற்படுத்துதல்.
- முறையான திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகளின் மூலம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகளுக்கு உதவுதல்.
- அரசின் பெரிய அளவிலான உறைவிடம் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களைப் பரப்பி அவைகளை எளிதில் அணுகும் முறைகளை உறுதிப்படுத்துதல்.
- மத்திய அசின் திட்டங்களுக்காக மாநில அரசுகள் தத்தம் பங்குகள் மத்திய அரசுக்குக் கிடைக்கும்படி செய்தல்.
- அவசியப்பட்டால், கிராமப்புற உறைவிட மேம்பாட்டுக்காக மாநில அரசுகள் அயல்நாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவியினையும் பெற முயற்சிகளை மேற்கொள்ளுதல்.
- புறக்கணிக்கப்பட்ட கட்டிட மையங்களைப் புதுப்பிக்கும் முயற்சியினை மாநில அரசு மேற்கொள்ளக்கூடிய முக்கியமானதொரு செயலாகும். நிலம், கட்டிடம், இயந்திரங்கள் போன்ற பலதரப்பட்ட சொத்துக்களை உருவாக்குவதில் மத்திய அரசு ஏற்கனவே நிறைய பணம் செலவழித்துள்ளது. இவை "வருமானம் தராத சொத்துக்கள்" (Non-performing Assets) என அழைக்கப்படுகின்றன. இவைகளை முறையாக நிர்வகித்தால் கிராமப்புற உறைவிட மேம்பாட்டுக்கு இந்த வளங்கள் மிக ஏதுவாக அமையும்.

### 5.1.4 மத்திய அரசு கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ளும்:

- திட்டமிடுதல், பொருளாதாரம் விதிமுறைகள், சட்டம் மற்றும் நிறுவனம் ஆகியவைகளில் சீர்திருத்தம் கொண்டுவருதல்.
- வீட்டுவசதி மற்றும் ஆதாரக் கட்டமைப்புத் துறைக்கு எல்லாவித வளங்களும் கிடைக்கும் வகையில் பெரிய அளவிலான பொருளாதாரக் கொள்கைகளை வகுத்தல்.
- நீடித்திருக்கக்கூடிய நிலவள மேம்பாடு போன்ற பிற வளங்களின் அதிகபட்ச உபயோகத்திற்குத் தேவையான விதிமுறைகள், திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்குதல்.
- நீர் வளம், தொடர்பு, மின்விநியோகம் போன்ற ஆதாரக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கத் தேவையான

செயல்திட்டங்களை வடிவமைத்தல்.

- மனித குடியிருப்புக்களின் தரத்தை மேம்படுத்தும் வகையிலும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதத்திலும் முறையான இயற்கை விதிமுறைகளை ஏற்படுத்தி அமல்படுத்துதல்.
- உபவிதிகளின் சீர்திருத்தம், சட்டம் மற்றும் விதிமுறைகளை எளிமைப்படுத்துதல், சொத்துப்பத்திரங்களை அறிமுகப்படுத்துதல், கண்காணிக்கும் அமைப்புக்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் சிறப்பான செயல்பாடுகளின் மேம்பாடு ஆகியவைகளைக் கவனத்தில் கொண்ட கிராமப்புற சீர்திருத்தங்களை தொடர்ந்து நிறைவேற்றுதல்.
- வீட்டுவசதி, ஆதார கட்டமைப்பு, விதிமுறைகள் மற்றும் கண்காணிப்பு செயல்முறை ஆகியவற்றிற்கு, வரிச்சலுகைகள் அளித்தல். இச்சலுகைகள் முறையாக சென்றடைவதையும், பயனளிப்பதையும் உறுதிப்படுத்துதல்.
- கிராமப்புற மேம்பாட்டுத்துறையின் செயல்பாடுகள் மற்றும் நிதித்துறையின் சீர்திருத்தங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல்.
- "தேசிய கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிடக் கொள்கை - 2006" ஒரு காலவரைக்கு உட்பட்டு செயல்படுத்தப்பட அந்தந்த மாநில அரசுகளுக்கு பரிந்துரை செய்து, வழிநடத்துதல்.
- தேசிய ஐந்தாண்டு திட்டங்களிலும் மத்திய நிதி ஒதுக்கீட்டிலும் கிராமப்புற உறைவிட மேம்பாட்டு முறையான முக்கியத்துவம் பெற வகை செய்தல்.
- வீட்டு வசதி செயல்பாடுகளை வடிவமைக்கவும், தீர்மானங்களை நிறைவேற்றுவதில் உதவவும் வீடு கட்டுமான செயல்பாடுகளைப் பற்றிய தேசிய அளவிலான நிர்வாக தகவல் அமைப்பை (MIS) உறுதிப்படுத்துதல்.
- நூதனக் கட்டுமானப் பொருட்கள், எரிசக்தி மிச்சப்படுத்தும் கட்டுமான தொழில்நுட்பங்களின் பரிமாற்றம் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகளை ஊக்குவித்தல்.
- கிராமப்புற உறைவிட மேம்பாடு, நகர்ப்புற உறைவிட மேம்பாடு ஆகியவை ஒருங்கிணக்கப்பட்டு செயல்படுவதைக் கண்காணிக்க மனித குடியிருப்புக்கான ஒரு தேசிய ஆணையத்தை (National Commission on Human Settlements - NCHS) நிறுவுதல்.
- "தேசிய கிராமப்புற உறைவிட மேம்பாட்டு நிதி" மற்றும் "மீட்பு நிதி" ஆகியவற்றை அமைத்தல்.

### 5.2 நிதி நிறுவனங்கள், கீழ்க்கண்ட பணிகளைச் செய்யும்.

- கிராமப்புற உறைவிட மேம்பாட்டில் நிதித்துறையின் பங்கை மறுபரிசீலனை செய்தல், பலனளிக்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிதல், நிதியுதவி செயல்பாட்டை விரிவாக்குதல் ஆகியவைகளை மேற்கொள்ளுதல்.
- கிராமப்புற மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் எளிதான, சாதகமான நிதியுதவித்திட்டங்களை உருவாக்குதல். கடன் திருப்பிச் செலுத்தும் முறையை எளிதாக்குதல். சலுகைகள் அளிப்பதன் மூலம் பாதுகாப்பான, நீடித்திருக்கக்கூடிய வகையிலான கட்டுமான முறைகளை ஊக்குவித்தல்.
- நிரந்தர வருமானம் இல்லாமலிருக்கும் எளிய மக்களின் தேவைகளுக்கு கடன் வசதிகள் வழங்க நூதனமான கடனுதவித் திட்டங்களளை வகுத்தல். அரசுசாரா சேவை நிறுவனங்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புக்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கை உருவாக்குதல் மற்றும் சிறுசேமிப்பு திரட்டல் ஆகிய பணிகளை மேற்கொள்ளலாம். இந்த செயல்பாடுகளுக்கான நிதியுதவி மேற்குறிப்பிட்ட நிருவனக்களின் வழியாக செய்யப்படலாம்.
- சுயஉதவிக்குழுக்களில் தகுதி உள்ள அங்கத்தினர்களுக்கு மொத்த கடன் உதவி தருவதன் மூலம் அரசுசாரா சேவை நிறுவனங்கள் மற்றும் சிறுநிதி அமைப்புகள், சிறுசேமிப்பு பொன்றவைகளை ஊக்குவித்தல். இத்தகைய அமைப்புகளின் உதவியுடன் சுய உதவிக்குழுக்கள் சிறிது காலத்திற்குப்பின் தாமே முன்வந்து தம் அங்கத்தினர்களுக்கு வீட்டுக் கடன் பெற்றுத் தரும் பணியைக் கையாளும் திறனைப் பெறுகின்றன.
- நிதி அமைப்புகள் தங்களின் நிதியிலிருந்து ஒரு பகுதியை இத்தகைய ஏழைகளின் வீட்டுவசதி உதவிகளைச் செய்வதிலும் ஆதார கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளிலும் முதலீடு செய்யலாம்.
- கடன் உதவி வழங்குவதில் நூதன மற்றும் சாதகமான முறைகளைப் பயன்படுத்தி கிராமப்புற வாடிக்கையாளர்கள், காப்பீட்டு வசதியைப் பெற்றுப் பயனடைய ஊக்குவித்தல்.

### 5.3 அரசுசாரா சேவை நிறுவனங்கள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்யும்.

- பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உறைவிட சுற்றுச்சூழல் பற்றிய முறையான, பயனுள்ள கருத்துக்களை மீண்டும் மக்களிடையே ஏற்படுத்துதல். முழுமையான உறைவிட மேம்பாடு என்பது தனித்தனியே செயல்படுத்தப்படும் திட்டங்கள் என்றில்லாமல், இது ஒரு ஒருங்கிணைந்த திட்டம் என்பதை மக்கள், அரசு அதிகாரிகள் மற்றும் இதர பங்குதாரர்கள் உணரும்படியாகச் செய்தல்.
- கிராம சமுதாயத்தினருக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் உறைவிட மேம்பாட்டிற்கான நூதன தொழில்நுட்ப முறைகளின் அறிமுகம் மற்றும் நிறுவன தீர்வுகள் ஆகியவைகள் கிடைக்க உதவுதல்.
- பெரிய அளவிலான உறைவிடச் செயல்பாடுகள் பயனுள்ளதாகவும், எளிதாகவும் நிர்வகிக்க வல்லதாகவும், தனியார் துறை நிதி முதலீடு லாபகரமாக இருக்கவும் கிராம வாடிக்கையாளர்களை ஒருங்கிணைத்து வழிகாட்டுதல்.
- கிராமப் பஞ்சாயத்துக்களுடன் இணைந்து நில ஒருங்கிணைப்பு, வீடு கட்டுமானம் மற்றும் வசதிகள் மேம்பாடு

ஆகியவைகளை மேற்கொள்வதில் முக்கிய பங்கு வகித்தல்.

- நில கையிருப்பு மற்றும் நீட்டிப்பு சேவைகளை பஞ்சாயத்துக்களுக்கு அளித்தல். நீண்டகால அடிப்படையில் போதிய அளவு தொடர்ச்சி மற்றும் ஆதரவு இல்லாத திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் பயனற்றதாகும்.
- அயல்நாட்டு நிதி பஞ்சாயத்துக்களுக்குக் கிடைக்கவும், தேவைக்கேற்ற இடங்களில் அவைகளின் உழைப்புத்திறன் மற்றும் திறமைகள் அதிகரிக்க உதவுதல்.

**5.4 தனியார் துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்யும்.**

- உறைவிட மேம்பாட்டைப் பொறுத்தமட்டில், தனியார் துறையின் பொருட்களுக்கும், சேவைகளுக்கும், கிராமப்புறங்கள் லாபகரமான வர்த்தக சந்தை என்பதை தெளிவாக்க நூதன முறைகளை வகுத்தல்.
- கிராமப்புற சந்தைக்காக உறைவிட சம்பந்தப்பட்ட பொருட்களையும், சேவைகளையும் வடிவமைத்தல் மற்றும் உள்ளூர் சிறுதொழில் உரிமையாளர்களை ஊக்குவித்தல்.
- கிராமப்புற உறைவிட மேம்பாட்டில் கூட்டுறவின் மூலம் செயல்படுத்தக்கூடிய திட்டங்களை வடிவமைக்க, பஞ்சாயத்துக்களுடனும் மற்றும் அரசுசாரா சேவை நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல்.

**5.5 ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்ற அமைப்புகள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்யும்.**

- தொழில்நுட்பம் மற்றும் விநியோக ரீதியில் புதிய, நீடித்திருக்கும் தொழில்நுட்ப மாற்று முறைகளை பாரம்பரிய கட்டுமான செயல் முறைகளுடன் இணைத்தல்.
- உள்ளூர் வளங்கள், கட்டுமானம் மற்றும் சந்தைகள் ஆகியவைகளுக்கிடையேயான தொடர்புகளின்னடிப்படையில் தொலைநோக்குடைய தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.
- இயற்கையான சுற்றுச்சூழலின்மேல் உள்ள அழுத்தத்தை குறைக்கும் வகையில், முடிந்த அளவு உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களை உபயோகிப்பதை ஊக்குவித்தல். மேலும் எளிதில் கிடைக்காத மூலப்பொருட்களின் உபயோகத்தைக் குறைத்தல்.
- நடைமுறையில் இருக்கும் சுற்றுச்சூழல், சமுதாய மற்றும் கலாசார வழிமுறைகளைக் கருத்தில் கொண்டு உள்ளூரில் பெரிய அளவில் செயல்படுத்தக்கூடிய மாற்றுத் தொழில்நுட்பங்களை நடைமுறைபடுத்துதல்.
- புதிய கட்டிடங்களுக்கு பேரழிவுகளைத் தவிர்க்கும் தொழில்நுட்ப முறைகளைக் கையாளுதல், ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளை பலப்படுத்துதல்.
- மற்ற பங்குதாரர்களுடன் தகவல் மற்றும் தொழில்நுட்பங்களை பகிர்ந்துகொள்ளுதல். நூதன, நீடித்திருக்கக்கூடிய கட்டுமான முறைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

**5.6 அயல்நாட்டு நிதி நிறுவனங்கள் செய்யவேண்டியது:**

- உறைவிட மேம்பாட்டுக்காக கிடைக்கும் நிதியுதவியை, அரசுசாரா சேவை அமைப்புக்களோ, அரசு அதிகாரிகளோ தவறான முறையில் பயன்படுத்தாத வண்ணம் கண்காணித்தல். மேலும் அந்த நிதி கிராமப்புற உறைவிட மேம்பாட்டிற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வழிவகை செய்தல்.

## 6. செயல்பாட்டுத்திட்டம் / தொடர்ந்த கண்காணிப்பு

(i) மாநில அளவிலான கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிடக் கொள்கையை மற்றும் திட்டவட்டமான செயல்பாட்டு முறைகள் ஆகியவற்றை தயாரிப்பதில் மத்திய அரசு மநில அரசுகளுக்கு உதவும்.

(ii) மாநிலங்கள் மாநில கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிடக்கொள்கை செயல்பாட்டுத் திட்டத்தை தயாரிக்கும். அதில் குறிப்பிடப்படுவன: (a) நிறுவன, சட்டரீதியான, விதிமுறைகள் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட கொள்கைகள் இருக்கும். இவை, (i) நில விரீயோகம், (ii) சட்ட/உபவிதிகளில் மாற்றங்கள் (iii) தொழில்நுட்ப மேம்பாடு (iv) ஆதாரக் கட்டமைப்பு உதவிகள் (v) உறைவிடம் மூலம் வாழ்வாதாரங்கள் பலப்படுதல் ஆகியவைகளைச் சார்ந்திருக்கும்.

(iii) SRHAP, அரசு வளங்கள், தனியார் துறை வளங்கள் மற்றும் இதர அரசுசாரா சேவை நிறுவனங்கள், சமுதாய அமைப்புக்கள், குறு மாநிலங்கள் மற்றும் பஞ்சாயத்துக்கள் ஆகியவைகள் ஒருமுனைப்படுத்தப்பட்டு பங்கேற்பு முறையில் இயங்க ஊக்குவித்து, வழிநடத்திச்செல்லும்.

(iv) வீட்டு வசதிக்குத் தேவையான நிதி, சகாயவிலைக் கட்டிடத் தேர்மானங்கள், திட்டமிட்ட மற்றும் சமநிலையான பிரதேச வளர்ச்சியை ஊக்குவித்தல், வேலை வாய்ப்புப் பெருக்கம், பலவீனமான மக்கள் சமுதாயத்தைப் பாதுகாத்தல், கூட்டுறவு முயற்சிகளை ஊக்குவித்தல், கிராமிய சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் நிர்வாகத் தகவல் அமைப்பை செயல்படுத்துதல் ஆகியவைகளின் மூலம் நீர், சுகாதார வசதிகள் ஆகியவைகளை ஆதாரக் கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட நீடித்திருக்கக்கூடிய உறைவிடங்களை இக்கொள்கை மேம்படுத்தும்.

(v) 'தேசிய மனித குடியிருப்பு ஆணையம்' ஒன்றை அரசு அமைக்கலாம். அது,

(a) நீடித்திருக்கும் தன்மை, சமநிலையான பிரதேச மேம்பாடு, உறைவிடங்களின் நிலைமை, எளிதில் கிடைக்கும் ஆதாரத்தேவைகள், வறுமையின் தன்மை ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு, 'இந்தியாவின் மனித குடியிருப்புக்களின்' தன்மையைக் கணிக்கும்.

(b) 73ஆவது தேசிய சட்டத்தின்படியான மத்திய அதிகாரத்தைக் குறைத்தல் என்ற செயல்முறையின் வளர்ச்சியை பரிசீலனை செய்யும்.

(c) வீட்டுவசதி மற்றும் உறைவிடம் சார்ந்த கொள்கைகளின் லட்சியங்களை அடைய பலதுறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டு முறைகளைப் பரிந்துரைக்கும்.

(d) (a), (b) மற்றும் (c) சம்பந்தப்பட்ட தகவல்களைச் சேகரிக்க, ஆராய்ச்சி, இடங்களை சந்தித்தல் போன்றவைகளை மேற்கொள்ளும்.

(vi) தேசிய கிராமப்புற வீட்டுவசதி மற்றும் உறைவிட மேம்பாட்டுக் கொள்கை 2006-ன் செயல்பாட்டை குறிப்பிட்ட காலங்களில் கண்காணிக்க மத்திய அரசு அளவிலான உயர் மட்டக் கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப்படும்.

7. இந்தக்கொள்கையின் முடிவான லட்சியம் யாதெனில், நீடித்திருக்கக்கூடிய, அனைத்து அம்சம்களையும் உள்ளடக்கிய மனித உறைவிட மேம்பாடேயாகும். இது அனைத்து பங்குதாரர்களின் திறன்களையும் கொண்டு எல்லாக்குடிமக்களுக்கும் உறைவிடம் மற்றும் உயர்ந்த வாழ்கைத் தரத்தை அளிக்கிறது.

**இணைப்பு -** 2006-ம் ஆண்டு ஃபிப்ரவரி மாதம் 23ம் நாள் புது தில்லியில் நடந்த கருத்தரங்கில் உருவாக்கப்பட்ட 'தேசிய கிராமப்புற வீட்டு வசதி மற்றும் உறைவிட கொள்கை'யின் மாதிரிப்படிவம் உருப்பெற உதவியவர்களின் பட்டியல்.

| | | Organization | Email Address |
|---|---|---|---|
| 1. | அமிதாப் முகர்ஜி | Holtec Consulting Pvt. Ltd. | am@holtecnet.com |
| 2. | அஷோக் கோஸ்லா | Development Alternatives | akhosla@devalt.org |
| 3. | அவ்னி மல்ஹோத்ரா | Swiss Agency for Development and Cooperation | avni.malhotra@sdc.net |
| 4. | பக்வத் பிரசாத் | ABSSS | absssss@sancharnet.in |
| 5. | பினோய் ஆசார்யா | UNNATI | unnatiad1@sancharnet.in |
| 6. | ஜி. எஸ். மேனன் | NABARD | nabnfs@bom5.vnsl.net.in |
| 7. | ஜோ மடியத் | Gram Vikas | info@gramvikas.org |
| 8. | ஜாய் எலாமோன் | SDC-CapDeck | capdeck@asianetindia.com |
| 9. | கிரண் ஷர்மா | PACS Programme | ksharma@devalt.org |
| 10. | கீர்த்தி ஷா | INHAF | kirtee@ksadps.com |
| 11. | மேக்னா குல்கர்னி | Sahayog Nirmitee | ltr_sahayog@sancharnet.in |
| 12. | மோனா சாப்ரா ஆனந்த் | Development Alternatives | mchhabra@devalt.org |
| 13. | நைனா ஷா | Exnora International | exnora@gmail.com |
| 14. | பிரபாத் ராவ் | HDFC Bank Ltd. | prabhatr@hdfc.com |
| 15. | பிரவின் வரன் | UN Commission on Human Rights | pwaran@hic-sarp.org |
| 16. | ஆர். இளங்கோ | TVSG | panchayat@yahoo.com |
| 17. | டி. சுப்ரமண்யம் | HUDCO | subbu@hudco.org |
| 18. | எஸ். கே. ஷர்மா | People First | peoplefirst@devalt.org |
| 19. | ஷிவானி சௌத்ரி | UN Commission on Human Rights | schudhry@hic-sarp.org |
| 20. | சுபாஷ் சந்திர ஜலோரா | Development Solutions | dsajmer@datainfosys.net |
| 21. | ஸீனத் நியாஸி | Development Alternatives | zniazi@devalt.org |

basin

South Asia